அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page-NO-53-

மலர்: 12	சார்வரிஸு கார்த்திகைமீ	வருட சந்தா
இதழ்: 8	நவம்பர்-டிசம்பர்-1960	ரூ. 3-00

முற்பிறப்பில் சிலந்தியாய் வழிபட்ட
கோச்செங்கட்சோழ நாயனுர்.

பெரியபுராணச் சித்திர விளக்கம் 80 பக்கம் 360

ACC.NO. 13855
ACC.NO. 13855.

உள்பொருள்

பக்கம்

1. ஓங்காரத்துள்ளொளியில் - தூங்காத தூக்கம் (திருப்புகழ்மணி) ... 337
2. பெருவீரன் (கி. வா. ஜகந்நாதன்) ... 341
3. பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை). 345
4. செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வுற (இலந்தையடி கவுணியன் வித்வான இராஜசிவ. சாம்பசிவ் சர்மா) ... 349
5. கோச்செங்கண் சோழ நாயனர் (கி. வா. ஜ.) ... 360
6. 'ஊனத்தசை' சீகாழித் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 363
7. பிணிக்கு மருந்து (ஆ. கி. ரங்கராஜன்) ... 373
8. சிவகளிறும் பவகளிறும் (ரஸபதி) ... 376
9. Bhajans Part IV (*Thiruppugal Mani*). 383

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : *முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.*

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : முத்துஸ்வாமி

மலர் 12	சார்வரிஷு கார்த்திகைமீ நவம்பர்-டிசம்பர்—1960	இதழ் 8

ஓங்காரத்துள்ளொளியில் தூங்காததூக்கம்

(திருப்புகழ் மணி)

ஆண்டவனுடைய தேஜோ மயமான திவலை ஜீவனாக உலகில் வருகிறது. அந்த ப்ரும்மத்தினுடைய சித்தத்தில் உலகில் ஜீவராசிகளாக விளையாட வேண்டும் என்ற எண்ணம் வந்தவுடன், சூரியனுடைய கிரணங்கள் ஒவ்வொன்றும் பரவுவது போல், பகவானுடைய தேஜோன் மயமான கிரணம் பரவ ஆரம்பிக்கிறது. அப்பொழுது ஜெகன் மாதாவாகிய அகிலாண்டேசுவரியினுடைய அருளும் கலக்கிறது. அதுதான் ஜீவராசிகளாகத் தோன்றுகிறது. உயிருக்குயிரான தத்துவத்தைத்தான் உபநிஷத் முதலிய நூல்களெல்லாம் போற்றுகின்றன. இந்தத் தத்துவத்தைத் தான் அருணகிரியார் முருகனென்று கூறுகிறார். எந்த ஒரு ஜோதி சிவன், விஷ்ணு, பிரம்மா என்ற

நகையினிது, நண்பர் நடுவில் ; பொருளின்
தொகையினிது, தொட்டு வழங்கும்போ தென்பாரே.

—நான்மணிக் கடிகைக் கருத்து.

மூன்று உருவங்களாக விளையாடுகிறதோ அந்த ஒப்பற்ற ஜோதிதான் முருகன். எந்த அன்பன் எந்த ரூபமாக நினைக்கின்றானோ அந்த ரூபமாக ஏனென்று கேட்பது முருகதத்துவமே. ஏனெனில் நினைப்பவனுடைய மனம் ஆண்டவனுடைய அமிசத்தினால் தோன்றியதுதானே. அந்த மனத்திற்கு ஏற்றபடி முருக தத்துவம் தோன்றுகிறது.

அபேதமான முருக தத்துவத்தை நினைத்துக் கொண்டு போகையில், பேதத்தில் மனத்தை நாட்டலாகாது. அபேதமான முருகனே பற்பல பேத ரூபங்களாக விளையாடுகிறான் என்ற எண்ணம் வேண்டும்.

கண்ணன் கீதையில் "நான் ஜீவராசிகளின் உணர்ச்சியாக இருக்கின்றேன்" என்றார். அந்த உணர்ச்சியே முருகன். நான்கு வேதங்களின் முடிவாயிருக்கும் வேதப்பொருள்தான் ஒவ்வொரு ஜீவராசிகளும் 'நான்' நான் என்று மார்தட்டிக் குறிப்பிடும் உணர்ச்சி. அதுவே முருகன் என்ற கருத்தை "நாலந்த வேதத்தின் பொருளோனே நானென்று மார்தட்டும் பெருமாளே" என்ற திருப்புகழில் அருணகிரியார் உணர்த்தி யுள்ளார். "எல்லா ஜீவ ராசிகளிலும் வாஸுதேவனாகிய நான்தான் இருக்கிறேன். எல்லாம் வாஸுதேவ ஸ்வரூபமே என்று எவன் அறிகிறானோ அவனே மஹாத்மா என்றார் கண்ணன். 'நான்' 'எனது' என்பது எங்கு மாண்டு நிற்கிறதோ அந்த இடத்திலிருப்பது வாஸுதேவ ஸ்வரூபம்தான்.

' பெண்ணிற்(கு) இனிது, பெருங்கற்புத் தருமம்
புண்ணிற்(கு) இனிது, பயனுணர்வார் உள்ளாரேல்.

மனிதன் சரீரம் எடுக்கின்றான். அது ப்ரகிருதி ஸ்வபாவத்தினால் வளருகிறது. அதில் முருகன் வசித்து வருகிறான். எந்த ஓங்கார சப்தத்திலிருந்து இந்தச் சரீரமும், அவன் நான். எனது என்று நினைத்துக் கொண்டிருந்தவைகளும் தோன்றினவோ அந்த ஓங்கார சப்தத்திலேயே அவையனைத்தும் ஒடுங்கி விடுகின்றன. உடலாக விளையாடிய ஜீவராசி களனைத்தும் ஓங்காரத்தில் முருகன் அமைத்துள்ள டிராயிங்க் ரூமாகிய ஓங்கார உள்ளொளியில் போய்த் தூங்குகின்றன. ஓங்கார உள்ளொளியில் தூங்கத் தெரிய வேண்டும். முருகாவென்று நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அந்த நாமசப்த மாகிய ஓங்காரத்தில் மனம் ஒடுங்க, 'நான்' 'எனது' என்ற நினைவும் தானாகிய ஆனந்த உணர்ச்சியில் ஒடுங்கித் தூங்குகிறான். இதுவே ஓங்காரத் துள் ளொளியில் தூங்கும் தூங்காத தூக்கம். அந்த ஓங்காரத் துள்ளொளியையே அருணகிரியார் முருக னென்றார். ஆழ்வார் நாராயணனென்றார். அப்பரும் மாணிக்கவாசகரும் சிவன் என்றனர். மூர்த்திபேதம் உண்டே தவிர உள்ளே யிருக்கும் ஜோதி ஒன்று தான். அந்த ஜோதி உருவங்களிலே அரூபமாய் விளையாடுகிறது. உலகிலிருக்கும் ரூபங்கள் எல்லாம் ஆண்டவன் அருளை உணர்த்தும் பூதக்கண்ணாடிகள்.

எல்லாம் ஒன்றா யிருக்கப்பட்ட தத்துவத்தைப் பார்க்கத் தெரியாதவனுக்குச் சேர்க்கையேது? ஆண்ட வனுடன் எப்படிக் கலக்க முடியும்? பேதத்தைக்

இரப்பார்முன் தலைகுனிவர் லோபியர்கள், எஞ்ஞான்றும்
கரப்பா ருடன்பொருளோ, கடைநாளில் வாராதே.

கீழே தள்ளி "எல்லாம் ஒன்று" என்ற அபேதத்தில் எழுந்து நிற்பவன்தான் முருகனைப் பார்க்க முடியும். மற்றவன் பேதத்தைத்தான் பார்க்கிறான். வினையைத் தீர்ப்பது வேல். அந்த வேலை நினைத்து முருகன் சரணத்திலே உள்ளத்தை நாட்டுபவர்க்கு, 'யுகம் போய் ஜகம் போய் பாடும் கவுரி பவுரி கொண்டாடும் பொழுது பரமாயிருக்கும் அதீதத்திலே' என்று கந்தரலங்காரத்தில் கூறியபடி பரம் என்ற தத்துவத்திலே நிலைத்து ஆனந்தமா யிருக்கமுடியும்.

ஜீவாத்துமாவாகிய வள்ளி முருகனை நாடி அவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற ஞானத்தைப் பெறுமல் திகைத்துச் சோர்ந்திருக்கையில், தனது ரூபதரிசனத்தைக் காட்டினன் முருகன். ஜீவராசிகளுக்குக் கஷ்டம் வந்து சேர்ந்து ஒன்றும் தெரியாமல் ஆண்டவனைப் பூரண சரணுகதியடையும் பொழுது ஆண்டவன் தரிசனம் தந்து தன்னிடம் சேர்த்துக் கொள்கிறுன் என்ற தத்துவத்தையே வள்ளி கலியாணம் உணர்த்துகிறது. பிறகு முருகனும் தானும் வேறெனறெண்ணுத நிலையில் முருகனுடன் கலந்தாள். எல்லாம் நீ, எனையாண்ட ஈசன் நீ என்று முருகனைப் பாடி அனுபவித்தாள். நாமும் பற்றற்று எல்லாம் நீ யென்று முருகனைப் பாடிக் கைதூக்க வேண்டும். கையை கீழே தொங்க விட்டால் சில் விஷம் தீண்டும். ஆதலால் எல்லாம் நீயென்று கை கூப்பி விட்டால் நான் என்ற சில்விஷம் தீண்டாது. முருகன் பற்றி விடுவான். நாம் விட்டாலும் அவன் விடமாட்டான். முருகன் சரணத்தைப் பற்றுவோம்.

அநுபூதி விளக்கம் :

பெருவீரன்

(கி. வா. ஜகந்நாதன்)

" பேராசைப் பிணியில் சிக்கி நான் உழல்வது முறையா ?" என்று கேட்ட அருணகிரிநாதர் முருகனைத் துதிக்கிறார். பேராசையினால் அமரர் வாழ்வைக் குலைத்த சூரபன்மனை மாய்த்த பெருவீரத்தை எண்ணிப் பாராட்டுகிறார்.

பேராசையைப் போக்க வேண்டுமானால் நமக்கு ஞானம் வேண்டும். புறத்தே உள்ள பகைவர்களைக் காட்டிலும் அகத்தே எழும் பகை மிகவும் வலியது. அகப பகைகள் ஆறு ; அரிஷ்டவர்க்கம் என்று அவற்றை வடமொழியிற் சொல்வார்கள். அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனபன. இந்த ஆறிலும் தலைமை தாங்குவது காமம் அல்லது ஆசை. உட்பகையைப் போக்குவது தான் பெரிய வீரம். புறப்பகையை எறியும் மன்னனைவிட அகப்பகையை எறியும் ஞானி ஆயிரங்கோடி பெரியவன். அத்தகையவர்களே வீரரில் வீரர். " புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம் " என்பது ஔவையின் வாக்கு. இறைவனுடைய அடியார்களுக்கு அத்தகைய வீரம் உண்டாகும். அடியார்களின் பொது இயல்பைச் சொல்லவந்த சேக்கிழார் அவர்கள் வீரமுடையவர்கள் என்கிறார்.

" ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ ?"

பேராசையைப் போக்குவதற்குப் பெருவீரம் வேண்டும். அத்தகைய வீரம் நம்மிடம் இல்லை. அதனால் பேராசைப் பிணியிற் சிக்கி உழலலாமா ? பலம் இல்லாதவர்கள் பலம்

உள்ளவர்களுடைய துணையைப் பெறலாம். மனிதனுக்கு இறைவன் அறிவைக் கொடுத்திருக்கிறான். தன்னிடம் உள்ள குறைபாடுகளை அறிவின் திறத்தினால் நிரப்பிக் கொள்ள வழி காட்டி யிருக்கிறான். மனிதன் மிக வேகமாக ஓட முடியாது; குதிரை வேகமாக ஓடும். அறிவுள்ள மனிதன் குதிரையை வசமாக்கி அதன்மேல் ஏறி அதன் வேகத்தைத் தனக்குப் பயன் படுத்திக் கொள்கிறான். மிக்க வலிமையையுடைய யானையின் பலத்தைத் தனக்கு வேண்டிய வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்துகிறான். இன்று விஞ்ஞான அறிவினால் பஞ்ச பூதங்களையே தனக்கு ஏவல் செய்யும்படி ஆக்கிவிட்டான். இது ஒருவகை.

தன்னினும் சிறந்தவர்களுடைய ஆற்றலையும் அன்பினா லும் வழிபாட்டினாலும் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் மனிதனுக்கு இருக்கிறது. பொருள் அற்ற வறியவன் செல்வனை அண்டி வழிபட்டுப் பொருள்பெற்றுப் பயன்படுத்திக் கொளகிறான். மாணாக்கன் அறிவுமிக்க ஆசிரியனை யணுகி அன்பு செய்து அறிவைப் பெறுகிறான். மன்னர்கள் தமக்கு வேண்டிய வலிமையைப் படைகளால் பெறுவதோடு, தமக்கு வேண்டிய அறிவுரைகளை அறிஞர்களாற் பெறுகிறார்கள்.

ஆகையால் பேராசையைப் போக்கும் வீரர் நம்மிடம் இல்லையே என்று கவலைப்படாமல், சிறந்த வீரன் ஒருவனுடைய துணையைப் பெற்று அதைப் போக்கலாம். பேராசையை வென்ற வீரனை உலகில் காண்பது அரிது. யாரையேனும் அண்டி, இவனிடம் ஆசை இருக்கிறதா, இல்லையா என்று சோதித்துக் கொண்டிருக்க முடியாது. நிச்சயமாக வீரன் என்று தெரிந்த ஒருவனை அண்டி அன்புசெய்தும் வழிபட்டும் அவன் துணையைப் பெற்றால் நமக்கு வெற்றி கிட்டும்.

பிறர்விரும்பும் செயல் செய்யச், சான்றோர் பிரியமுளார்
திறமில்லரச சினவாரைத், திருமகள்தான் இணங்குவளே.

அத்தகைய வீரன் யார்? முருகன்தான். அவன் வீரமும் தீரமும் நிரம்பியவன். அவனுடைய வீரத்தைப் புலவர்கள் பாராட்டி யிருக்கிறார்கள். பேராசையைப் போக்கும் வீரம் இல் லாத நாம் அந்தப் பெருவீரனை அண்டினால் இந்தப் பகையைப் போக்கிக் கொள்ளலாம். இந்த எண்ணத்தோடு முருகனை, வீரா என விளித்தார்.

அவனுடைய வீரத்தைத் தெரிந்துகொள்ள வழி உண்டா? கந்தபுராணம் அவனுடைய வீரச் சிறப்பைச் சொல்லும் காவியம். மிகப் பலகாலமாகத் தன் வலிமையால் எல்லோ ருக்கும் கொடுமை இழைத்த சூரனை வென்ற சூரன அவன். அமரர்கள் முப்பத்து முக்கோடி என்றால் அசுரர்கள் அறுபத் தாறு கோடிப்பேர். அவர்களுக்குத தலைவனாக, அசுரேந்திர னாக இருந்து ஆயிரத்தெட்டு அண்டங்களைத் தனியரசாட்சி செய்து கொண்டிருந்தான. அவனுடைய பேராசை அந்த அளவில் நிற்கவில்லை. தேவர்களையும் தனக்குக்கீழ் ஆக்கித் தேவலோகத்தையும் தன் உரிமையாக்கிக் கொண்டான். பேராசையே வடிவாக நின்ற சூரபன்மனை அழிக்க இயலாமல் இந்திரனும் தேவர்களும் அஞ்சி ஓடி ஒளிந்தார்கள். அவர் களுக்குத் துணையாக வந்த முருகன் அந்தப் பழைய சூரனைக் கைவேலை எறிந்து அழித்தான். சூர சங்காரத்தினால் அப் பெருமானுடைய பெருவீரம் உலகினருக்குத் தெளிவாயிற்று.

வீரா, முதுசூர் படவேல் எறியும் சூரா!

பேராசை என்னும் பிணி நீங்கினால் நாம் ஞானம் பெற்று இறைவன் திருவருளால முத்தி நாட்டை அடையலாம். பேராசை யுருவாகிய சூரன் மடிந்ததனால் அமரர் தேவலோக வாழ்வைப் பெற்றார்கள். தேவர்கள் தம் வாழ்வைப் பெற வேண்டும் என்ற பொறுப்பை முருகன மேற்கொண்டதனால்

குலம் கருதாச் செல்வம், கூடும்ஊ ழின்படியே
நலஉயிரின் இரக்கவுரை, நமனார்தாம் கேட்பாரோ.

தேவர்கள் வாழ்ந்தார்கள். தேவலோகத்தைக் காவல்புரியும் கடமையை இயல்பாக உடையவன் இந்திரன். பகை ஒன்றும் இல்லாத வரையில் அவன் தேவர்களுககுத் தலைவனாக இருந்து போகத்தை நுகர்ந்து வாழ்ந்தான. விருத்திராசுரன் முதலிய சிறுபகை தோன்றியபோது அவர்களை அழித்து வெற்றி கொண்டான். ஆனால் சூரபன்மன் வந்தபோது அவ னுக்கு எதிர் நிற்கும் ஆற்றல் இந்திரனுக்கு இல்லை. தேவ லோகத்தைக் காப்பாற்றும் கடமையைக் கொண்டு செலுத்த முடியவில்லை; அந்தப் பொறுப்பை அப்போது மேற்கொண் டவன் முருகன். ஆதலின் உண்மையில் சுரலோகத்தை வாழ் விக்கும் பொறுப்பைத் தாங்கி நிற்பவன முருகன். குழந்தை யின் உடம்புக்கு வந்த நோயைப் போக்கி அது பின்னும் வளம் பெறப் பாதுகாக்கும் பொறுப்பைத் தாய் மேற்கொள்வது போல, முருகன் தேவர்களுக்குக் சூரனால் வந்த இன்னலை மாற்றி, சுரலோக துரந்தரனாக, தேவலோகத்தைக் காப்பாற்றும் பொறுப்பை உடையவனாக விளங்குகிறான்.

சுரலோக துரந்தரனே !

பேராசைப் பிணியிற் பிணிபட்ட நமக்கு இப்படி ஒரு வீரன், வேலை ஏந்திய சூரன், துணையாகக் கிடைத்தால் நமக்கு அச்சம் எதற்கு ? நம்முடைய பேராசைப் பிணியைப் போக்கச சூர சங்காரம் செய்தது போனற முயற்சி தேவை இல்லை. முருகன் தன் கடைக்கண் வீச்சு ஒன்றினாலே இதைப் போக்கி விடலாம். பிடித்தாலும் புளியங்கொம்பைப் பிடிக்க வேண்டும் என்றபடி, நமக்கு உள்ள சிறிய துன்பத்தைப் போக்க மிகப் பெரிய துணையைப் பற்றிக்கொள்வது நலம். அப்போது நிச்சயமாக நம்முடைய இன்னல் அடியோடு தீர்ந்துவிடும்.

மறைக்கமறை யாக்காமம், ஒழுக்கத்தால் மாண்டுவிடும்,
அறையரசர் மனம்போல ஆட்சி அமைந்திடுமே.

பேரா சையெனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோ கதுரந் தரனே!

[பேராசை என்னும் நோயிலே வேறு செயல் ஒன்றும் செய்ய இயலாமல் கட்டுப்பட்டு, ஞானவிசாரம் சிறிதும் செய்ய மாட்டாத பாவியாகிய நாயேன், மீட்டும் மீட்டும் பிறந்து உழல்வது முறையாகுமா? பெருவீரனே! பழைய சூரன் அழியும் படியாக வேலாயுதத்தை வீசிய சூரனே! தேவலோகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண்டவனே!

பிணி - கட்டுமாம். ஓர்தல் - பொருளின் நிலையை எண்ணுதல். வினை - பாவம். உழலல் - திரிதல். பலகாலம் வாழ்ந்தவ னுதலின் முதுசூர் என்றார். பட - அழிய. சுரலோகம் - அமரர் உலகம். துரந்தரன் - பொறுப்பை மேற்கொண்டு நலம் செய்பவன.]

பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும்

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

விதேக முத்தி வேட்கை :—

பாம்பனடிகள் இவ்வுலக வாழ்க்கை அருணெறிக்கு மாருக நடைபெறுதலைக் கண்டு வெறுத்தார். அவர் அவ்வாறு வெறுப்படையக் காரணத்தை தாம் இயற்றியருளிய 'பஞ்சாமிர்த வண்ணம்' என்ற நூலில் நன்கு விளக்கியுள்ளார்.

" வஞ்சம் சூது ஒனறும் பேர்
துனபம் சங்கட மண்டும் பேர்

பிறக்கும் உயிரைப் பிறவாதே எனலாமோ?
இறக்கின்ற அவ்வுயிரை, இரு என்றால் ஆவதுவோ.

மங்கும் பேய் நம்பும் பேர்
துஞ்சும் புன்சொல் வழங்கும் பேர்
மான்கணூர் பெணூர்தம் மாலினுல்
மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்பு
எனமது துய்த்துச சுழல்பவ ரிச்சித்தே
மனமுயி ருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினோர்
வசையுறு துட்டச் சினத்தினோர்
மடிசொல மெத்தச சுருக்குளோர்
வலியே றியகூ ரமுளோர் உதவார்
நடுவே துமிலார் இழிவார் களவோர்
மணமல ரடியினை விடுபவர் தமையினும்
நணுகிட எனைவிடு வதுசரி இலையே
— தொண்டர்கள் பதிசேராய் "

கடும்பசியும் கள்ளிப் பழமும் :

ஓரிரவு சுவாமிகட்கு விதேக முத்தியில் வேட்கை அதிகரித்தது. சென்னையை விட்டுத திருவொற்றியூரை அடைந்தனர். அதிகாலையில் கத்திவாக்கம் கடந்து பழவேற்காட்டைச் சேர்ந்தார். அங்குள்ள ஆலயத்தில் வழிபட்டபின ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கினுர். அவ் வீட்டுக்காரர் தீபங் கொண்டு வந்து இவரை வணங்கி உணண அழைத்தும் இவர் அன்புடன் மறுத்துவிட்டார். விடியுமுன அங்கிருந்து ஊருக் கருகிலுள்ள ஒரு குளத்தில நியம முடித்து ஒரு புளியமரத்தடியில் நினறுர். "முருகா" எனறு உரத்த குரலில் கூச்சலிட்டார். பக்கத திருந்த சிறிய காட்டில் இறைவனைத தியானித்திருந்தார். பசிக்குமுன பத்தும் பறககு மன்றோ! அடிகளாருக்கு மிகுந்த பசி யுண்டாகி வருத்தியது. அருகில் கள்ளிப் பழங்கள்

ஆகுங்கால், திருமகளால் செல்வம் பெரிதாகும்
போகுங்கால் எனறுகும், என்று செய்க புண்ணியமே

செந்நிறங் காட்டி இருந்ததலைக் கண்டார். * கள்ளிப் பழமுண்டால் கண்ணொளியே போய்விடும் என்பர். ஆனால் நம் அடிகள் பசி தாங்காமல் செவ்வேள் திருவடியைத் துதித்த வாறே கள்ளிப் பழங்களைப் பறித்து உண்டனர். அதனால் அவருக்கு எவ்வித ஊறுபாடும் நேரவில்லை. அதன் பிறகும் மாலை வருமளவும் அவர் தியான நிட்டையி லிருந்தார். போது சாய்ந்தது. அடிகள் நிட்டை கலைந்து குளத்தில் பஞ்சசுத்தி செய்து வழிபாட்டை முடித்து அக் குளப்படியிலேயே படுத்திருந்தனர். அங்குள்ள சிவலிங்கத்தைப பூசிக்கும் சைவர் அங்கு வந்து அடிகளாரை வலிய அழைத்துச் சென்று ஒரு சத்திரத்தில் படுக்கச் செய்தார். '' கொள்ளச் சயிலாக் கள்ளிப் பழமும் கொண்டேன் பசித்தொருகால் '' (குமரவேள் பதிற்றுப் பத்து அந்தாதி.)

பசி நீங்கிய பாங்கு :

பின்னர் அச் சைவர் சத்திரக் கதவைத் தட்டினார். இரு அந்தணர்களும் ஒரு வைசியரும் வந்தனர். சைவர் அவர்களை நோக்கி 'இச் சிவனடியாரை உள்ளே அழைத்துப்போய் நனகு கவனியுங்கள்' எனறு சொல்லிப் போயினர். அவர்களுள் வைசியர் சுவாமிகள் பசித்திருத்தலை உணர்ந்து குளத்திற் கபபாலுள்ள தம் வீட்டிற்கு அடிகளைக் கொண்டுபோய பாலும் சோறும் பரிவுடன் வற்புறுத்தி உதவினர். அடிகளும் குகேச னருளென அதனை உண்டனர். பழையபடியே சத்திரத்தில் அடிகள் வந்து படுத்தார்.

திருப்பாலைவனத் தெரிசனம் :

மறுநாள் காலை வைசியர் விரும்பியவாறு அர்ச்சக ரில்லத்தில் பாலும் பச்சரிசியும் கலந்து சமைத்த உணவுண்டனர்.

வேரற்றால் எம்மரமும் வீழ்ந்துவிடும் ; புண்ணியமா
நீரற்றால் வாழ்க்கை, சாய்ந்துவிடும் நிச்சயமே.

சத்திரக்காரர்கள் அடிகளாருடன் சாத்திர நுட்பங் குறித்து நெடுநேரம் பேசினர். அடிகளார் தாம் திருப்பாலைவனம் செல்லும் குறிப்பைத் தெரிவித்து விடைபெற்றார். மாலையில் (பொன்னேரி யடுத்துள்ள) திருப்பாலைவனத்து ஆலயத்தில் சிவகுக தரிசனம் செய்து,

"வேலை யுடுத்த விபுலை வாழ்நர்க்கு விவேகநெறி
நூலைவகுத் ததனுட்பமுங் காட்டியங் நோன்மைவழிக்
காலையளித் தருள்முக் கண்ணனுளுங் கனிவொடுவாழ்
பாலைவனத் திற்குமரனை நன்கு பணிகுதுமே."

எனப் பாடியருளி மண்டபத்தில் இருந்தார். அங்கே ஓரன்பர் இவருக்குப் பசும்பால் தந்து உண்பித்தனர்.

ஆண்டார்குப்பத்தில் ஓர் அற்புதம் :

அதிகாலையில் அடிகளார் பொன்னேரிக்குச் சென்று வழிபாடு முடித்து ஆண்டார்குப்பம் அடைந்தார். கோவில் மூடி யிருந்தது. கோயிலை வலம் செய்து எதிரிலுள்ள சத்திரத்துத் தங்கினுர். மாலை நேடுநேர மாகியும் கோவில திறவாதது கண்டு வருந்தித திரும்பினர். அதனைக் கண்ட ஒரு மறையவர் மங்கை அருசசகச சிறுவரைக்கொண்டு ஆராதனை நிகழ்த்தித் திருநீறளிக்கும்படிச செய்தனர். அப்போது அடிகளார் பெருமானை நோக்கித் தமககு விரும்பியவாறே தரிசனம் தந்தருளியது போலவே விதேக முத்தியும் அருளுமாறு கதறினர். இரவில் சத்திரத்தருகில் நினற இவரைக் கிராமாதிகாரியான நாகரத்தின முதலியார் கண்டு பாம்பனடிகள என்று தெரிந்து அழைத்துப்போய்ப் பாலும் சோறும் அளித்து மகிழ்ந்தார். அவர் மறுநாள் சுவாமிகளைத் திருவொற்றியூர் மகிழடி சேவைக்குத் தம் வணடியில ஏறறிக்கொண்டு போய் விட்டார்.

நல்லியல்பு இல்லார்க்கு, நல்லாரும் பொல்லாரே
நல்லியல்பர், யாவரையும் நயங்கொண் டணைப்பாரே.

" யாக்கையே பனிப்பென்று சென்னே விட்டு
எறுழொ டேகி ஒல்குறும் ஓர்கானில் உள்
நோக்கினுளி ரண்டொன்று காறும் ஊண்
நுகர்வில் வெப்பும் ஏர்நிகழ் ஓர்குப்பமே
பார்க்க வுற்றபோது ஊணில் புன்கனும்
படிய வேவனே கடவுளே எனக்
காக்க என்னெடும் போதரும் தனிக்
கனகணே இங்கா ளுகோவ தேதரோ "

என்று அடிகள் கூறுவதும் நோக்குக. அவர் பசித்தபோ தெல்லாம் முருகையன் ஆங்காங்கு அன்பர்கள் மூலம் அருளி யமை இவ்வரலாற்றல் காணலாம்.

" வேண்டிய போது அடியர் வேண்டிய போகமது
வேண்டவெ ருதுதவு பெருமாளே "

செந்திலே உணர்ந்து உணர்ந்து உணர்வுற

இலந்தையடி கவுணியன வித்வான்
(இராஜ சிவ. சாம்பசிவ சர்மா)

312-ம் பக்கத் தொடர்ச்சி.

இறைவன் திருவடியே எய்துதற்குரிய இடம் எனவும், அடைக்கலம் புகுதற்குரிய இடமுமாம் எனத் தெளிந்தபின், அத் திருவடியின் பெருமையை உணரவும், அதனே அருச்சித்துப் பூசிக்கவும், துதிக்கவும் உள்ளம் துள்ளி விழைவு கொள்ளும் என்பது பொய்யாகாது. " உன் நாமம் புகழ்பவர் பாதம் தொழ இனி நாடும்படி அருள் புரிவாயே ' எனத் தன்னே அறியாது கூறிக்கொளளச செய்யும். அந்நிலேயில் ' ஆவிசாவி ஆகாமல் நீ சற்று அருள்வாயே ' எனறு நெக்

தாய்என்க முன்செய்த நல்வினேயை ; தந்தைதான்
வாய்த்தகுரு என்றே, வாய்மலர்வார் நல்லோரே.

குருகி வேண்டிக் கொள்ளும். ஏனெனில் முருகப்பெருமான், 'அடியவர் இச்சையில் எவை எவை யுற்றன அவை தருவித் தருள் பெருமாள்' என்ற உணர்ச்சி உள்ளத்தில் ஊறிவிடு கின்றதன்றோ? 'துதித்தவர்கள் பாகனும் எமைப்போன்ற அடியார்க்கெல்லாம் அமிர்தமாய்' விளங்கும் அப்பெருமானை அறிவால் அறிந்து அறிந்து, உணர உணர ஆரா இன்பம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. வாயோ தானே அவன் பெருமைகளை எடுத்துக் கூறித் தன் குறைபாட்டை உணர்ந்து "உரையையும் அறிவையும், உயிரையும், உணர்வையும் உன்பாத கஞ்சமலர்மீதே உரவொடு புனைதர, நினைதரு மடிய ரொடு ஒன்றாக என்று பெறுவேனோ" என்று சொல்லு கின்றது. "நம்பும் அடியாரை ஆளவந்த பெருமாள்காண்" என்று உள்ளத்தில் தோற்றம் எழுகின்றது. அத்தோற்றம் உள் ளத்தில் பொங்கி எழவே, நா தன்கடமையாக, "பவசாகரத்தி லழுந்தி எழா எழாதுளம், ஆறெழுத்தை நினைந்து குகா, குகா என"ப் பாடத் தொடங்குகிறது. "தொல்லை மறைதேடி இல்லை எனும் நாதர் சொல்லு முபதேச குருநாதா" என விழைவொடு கூவி அழைக்கின்றது. அந்நிலையில் 'மருவும் அடியார்கள் மனதில விளையாடும் மரகத மயூரப் பெருமாளகாண்" என்று உணர்நது வியக்கினறது. அவ்வாறு வியக்கும் நிலை யில் உள்ளம் ஒன்றை வேண்டிக் கொள்ள விரும்புகின்றது. "சோகம் உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற சோகமது தந்து எனை ஆள்வாய்" எனத் தன் மெய்ம்மறந்து வாய் கூறிட, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நிற்கும் நிலை ஏற்படுகினறது. அந்நிலையில் மெய்யுணர்வுபெற எண்ணிய மனம் தனக்கு வேண்டுவனவற்றை, "சீவனொடுக்கம் பூதவொடுக்கம் தேற வுதிக்கும் பரஞான, தீபவிளக்கம் காண எனக்கு உன சீதள பத்மம் தருவாயே"என று வணங்கி வேண்டும்நிலை ஏற்படுகிறது

புலனை வயப்படுத்தில் தீவினைகள் பொன்றும்
நலம்மாறிச் செயல்செய்யின், நண்புநிலை நைந்திடுமே.

" சுருதி மறைகள் இருநாலு திசையி லதிபர் முனிவோர்கள்
துகளிலிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்
செருவில் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலேவில் உடுவில் உலகோர்கள் மறையோர்கள்
அரிய சமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியு மயனும் ஒருகோடி இவர்கூடி
அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும்
அறிவு ளறிய அறிவூற அருள்வாயே"

எனத் திருவடிப் பெருமையையும் அருமையையும் உணர்வால் *உணர உணர*, உள்ளம் குழைந்து வேண்டி இரந்து நிற்கின்ற அன்பிற் ருழ்ந்த மனமுண்டாகின்றது. இந்நிலேயில் முருகப் பெருமானின் சிறப்பும் பெருமையும் உண்மை நிலேயும் புலப் படுகினறது. " *அகர முதலென ஐம்பத்தொ ரக்ஷரமும்*, அகில கலேகளும் வெகுவிதங் கொண்ட தத்துவமும், அபரிமித சுருதியும் அடங்கும் தனிப்பொருளே—எப்பொருளுமாய அறிவை அறிபவர் அறியும் இன்பந்தனேத் துரிய முடிவை " எனறு இறைவனது அதீத நிலே உணரப் படுவதோடு, அறிவை அறியும் அறிவைப் பெறவேண்டும் என்ற உணர்ச்சியும் எழுகின்றது. உலகில் அறிவு என்று கூறப்படுவதெல்லாம் உலகியல அறிவு என்றும், அது உலக வாழ்விற்கே பயன் படுவதென்றும், அந்த அறிவும் முற்ற முடிந்த அறிவல்ல என்றும், அதில் அறியாமையும் கலந்துள்ளதென்றும், அந்த அறிவு மறுமைக்குப் பயன்படுவதின்று என்றும், அந்த அறிவால் ஆன்மா எள்முனேயளவும் எந்த நன்மையும் பெறுவ தில்லேயெனறும் உணர உணர, அதனினும் மேலான மெய் யறிவைப்பெற உள்ளம் விழையுமன்ரே! அத்தகைய அறிவே மெய்ஞ்ஞானம். அம்மெய்ஞ்ஞானவான்கள் உள்ளத்தில்தான் முருகன உறைகின்ருன். " மெய்ஞ்ஞான யோகிகள் உளமே

நன்றறியார், என்றும் நனறிதனேக் கொன்றிடுவர்
அன்பில்லார் இல்சென்ருல், அகம் அழுது மீளுமரோ

உறைதரு குமரா' என்று ஆசிரியர் கூறும்பொழுது எத்துணை அருமைப்பாடு புலனாகின்றது. அறிந்து அறிந்து உணர்ந்து தெளிந்த நிலையிலன்றோ மெய்ஞ்ஞானந் தோன்றும். கல்லார் மனத்துடன் நில்லாதவ' என்றும், 'கல்லார் மனத்துள் நில்லான் ஈசன்' என்றும் ஆன்றோர் கூற்றுக்களை நன்கு உணர்தல் வேண்டும். இங்குக் கற்றலாவது அற்ப வாழ்நாட்குரிய உலகியல் நூல்களைக் கல்லாது ஆன்மாவிற்கு உறுதுணையாகும் ஞான நூல்களைக் கற்றலையே குறிப்பதும் தெளிவாகின்றது அன்றோ! அத்தகைய மெய்ஞ்ஞான அறிவைப் பெரிதும் முயன்று பெற்றால்,

" பேணுறுதது வெளியே யொளியது,
மாய னுரய னறியா வகையது
பேத பேதமோ டுலகாய் வளர்வது, விந்து நாதப்
பேதமாய்கலை யறிவாய் துரியவ தீதமானது முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது - ஒனறுநீயே"

என்று நன்கு உணரும் அறிவுண்டாகும். உண்டாகவே, தன்னை இழந்து, மெய்யுணர்வில் ஆழ்ந்து, உள்ளம் மெய்ம்மை கண்டுணர்ந்த மகிழ்ச்சியின விளைவால் நாத்தழும்ப, கண்ணீர் மல்க, கரங்கள் சிரமேற் குவிய, உலகைப் புறக்கணித்து, வாய்திறந்து, மெய்ம்மயிர் பொடிப்ப நின்று,

" சயிலாங்கனைக் குருகி யிடப்பக்கம் கொடுத்த கம்பர்
—வெகுசாரி
சதிதாண் டவத்தர் சடையிடத்துக் கங்கைவைத்த நம்பர்
—உரைமாளச்
செயல்மாண்டு சித்தமவிழ நித்தத்வம் பெறப் பகர்ந்த
—உபதேசம்
சிறியேன் தனக்கும் உரைசெயில் சற்றுங் குருத்துவங்
—குறையுமோதான் ?"

என்றும்,

மலரின் இயல்பை மணங்காட்டும் ; மனநினைவை
நலமொழியும் நன்முகமும், நன்றாகக் காட்டும்மே

"இரவுபகல் போனதூனை; பரசிவ யோகிதீர,
மௌனமொழியும் விசுபாச—கனகோப
எமபடரை மோதுமோன வுரையில் உபதேசவாளை
யெனது பகைதீர நீயும்—அருள்வாயே,"

என்றும் வேண்டிநிற்கும் நிலை ஏற்படும். அத்தகைய நிலை ஏற்படுங்கால் பரபரப்பு ஏது? ஒளி ஏது? இருள் ஏது? அந்நிலை கேவல சகல நிலை அன்றோ! 'இரவு பகலற்ற விடத்தில் இருக்கை எளிதாகுமோதான? எளிதன்று என்பது நன்கு புலனாகும். அந்நிலை யெய்தப் பெறுவதுதான் 'சமாதி மனோ லயம்' எனறு கூறபபடும். அதனை அவன் அருள இன்றி அடைதல் எளிதாமோ? 'வேண்டிய போதடியர் வேண்டிய போகமது வேண்ட வெறுது உதவு பெருமாளே! உளங் குளிர்ந்து அருள்புரிய வேண்டும். ஆதலால் 'சிவாயமெனு நாமம் ஒருகாலும் நினையாத திமராகரனாகியவன், 'விரித் தருண கிரிநாத னுரைத்த தமிழெனுமாலை மிகுத்த பலமுடன் ஓத—மகிழ்வோனே முருகப்பெருமான் என்பதை உணர்ந்தேனும், திருப்புகழை விருப்போடு நாளும் உரக்கப் படித்துப் படித்து உணர்ந்து உணர்ந்து உள்ளத்தைக் கர்ப்பூரம் கரையு மாறு கரையச் செய்யவேண்டும். அதனால் அறிவு தெளிவுற்று, உண்மை நிலை உணர்ந்து எடுதத பிறவியில் எய்த வேண்டியதை நன்கு உணர்ந்து, தெளிந்து, "சீவன சிவச் சொரூப மெனத்தேறி, நான் எனபதற்று உயிரோடு ஊனென்ப தற்று வெளிநாதம் பரபிரம வெளிமீதே, ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியொடு நாளும் களிக்க பதமருள்வாயே" என்றும்,

"பறவையான மெய்ஞ்ஞானிகள் மோனிகள், அணுகொணாவகை நீடு மிராசிய, பவனபூரக வேகிகமாகிய விந்து நாதம், பகரொணாதது, சேரவொணாதது, நினைவொ

மழையின்றேல் மக்கட்கு வாழ்வில்லை; அம்மழையும்
தழைக்கும் தவமின்றேல், தரணியினில இல்லையரோ

ணுதது வான தயாபர, பரியதான சமாதி மனோலயம் வந்து தாரராய்'' என்றும்,

"இந்தச் சடமுடன் உயிர் நிலைபெற நளினம் பொற் கழலிணைகளில் மருமலர்கொடு என்சித்தமு மனமுமுருகி பல் சுருதியின் முறையோடே சந்தித்து அரஹர சிவசிவ சரண்எனக் கும்பிட்டு,'' வாயார, மனமார, நாவார,

"ஞாலமுண்டவர் சோதியங்கணர் பாகமொன்றிய வாலை யந்தரி, ஆதியந்தமு மானசங்கரி தந்த முருகோனே!" "பிறவிக் கடல் விட்டு உயர் நற்கதியைப் பெறுதற் கருளைத் தர வேணும்'' என்று பலகாலும் குறையிரந்து வேண்டி நிற்க வேண்டும். 'நினதருளது அருளி எனையும் மனதொடு அடிமைகொள வரவேணும்'' எனக் கதறி அழுதல் வேண்டும். வரதா மணியான முருகன் ஞானமா விஞ்சை முதுகில் ஏறி வருபவன்.' தொழுது வழிபடு மடியவர் காவற்காரப் பெருமா ளும் அவனே. மற்றும்,

'வற்று மதுக்கருணை யுற்றே மறைக்கலைக ளோதித் தெரிந்துதமிழ் சோதித் தலங்கலணி யத்தா பரத்தையறி வித்தாவி சுற்றுமொளி யாகிப் ப்ரபந்தமணி வேல்தொட் டமைந்தபுய வர்க்கா மருப்புழுகு முட்டா திருப்பழநி வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி—வரு பெரு மாளே'' என்று நன்கு உறுதியாக உணர்ந்து,

"அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய அருள்ஞான இன்பமது புரிவாயே'' என்றும், 'செஞ்சொல் அடியார்கள் வாரக்கார'' என்றும்,'' "மறவாத சிந்தை அடியார்கள் பங்கில் வருதேவ சம்புதரு பாலா'' என்றும், "அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே'' என்றும், "மறை போற்றறிய ஒளியாய்ப்

தக்கமனம் இன்றேல், தவக்கரப்பு நாட்டிலிரா
ஒக்கும் குடியின்றேல், அரசெதுவும் உய்யாதே

பரவு மலர்த்தாட் கமலம் அருள்வாயே'' என்றும், "நோய் கலந்த வாழ்வுறுமல் நீகலந்துள் ஆகுஞான நூலடங்க வோத வாழ்வு தருவாயே'' என்றும், 'அந்தகனும் எனை அடர்ந்து வருகையினில் அஞ்சலெனை வலிய மயில்மேல்நீ அந்த மறலியொடு 'கந்த மனிதன் நமது அன்பன்' எனமொழிய வருவாயே'' என்றும், "ஆலவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர அழியாப் புனித வடிவாகும் அடியார்க்கு எளிய பெருமாள்'' என்றும் போற்றிக் குறையிரந்து நின்றார். செந்திலே உணர்ந்து உணர்ந்து உணர்வுறக் கந்தனை அறிந்தறிந்து அறிவினிற் சென்று செருகும் தடம்தெளிதரத் தணியாத, சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து, உரையொழித்து என் செயல் அழிந்து அழிந்து அழிய மெய்ச சிந்தைவர'ப் பொருந்தும் நிலையை எய்தலாகும். அந்நிலையில் முருகனை நேரிற்கண்டுணரும் தரிசனம் பெறலாகும். அந்நிலையினை' எய்துதலே 'சமாதி மனோலயம்' பெறும் நிலையாகும். அந்நிலை யெய்தின் எமனையும் புறங்காட்டிச் செல்லும்படிச் செய்யலாம். ஆனால் அந்நிலை யெய்தல் எளிதாவதன்று. பிரபஞ்ச மாயையில் சிக்குண்டு உழலும் மக்கள் அரிஷ்டவர்க்கங்களில் தலைமையதான காமத்தைச சுட்டெரித்து, இராஜதம், தாமதம், சாத்விகம் என்ற முக்குணமும் அற்று, கால வேறுபாடு உணராமல், ஐம்புலன் ஐம்பொறிகளை அடக்கி இறைவன் திருவடியையே பாடிப் புகழ்நது மன வொடுக்கமுற்று, அகங்காரம் மமகார மற்று, என் செயலா லாவதில்லை எல்லாம் அவன் செயலெனப் பற்றற விடுத்து, மெய்யுணர்வு பெறவே விழைந்து, எண்ணங்க ளற்றுக் கருத்தற்று உரையற்று, உள்ளமற்று இறைவன் திருவடித் தியானம் ஒன்றிலே ஊன்றி அழுந்தி, நிரதிசயப் பேரானந்தப் பெருவாழவு எய்துதற்கு அதுவே செந்நெறி 'யெனச் சாத்திர அறிவினாலும், குருவின் உபதேசத்தாலும்,

மாலைமல ரால் உயரும் ; வண்டுதே னால்வாழும்
சாலக் குடிமக்கள் சால்பால் உயர்வாரே.

தியான் சமாதியாலும் உள்ளுணர்வாலும் உணர்ந்து, இறை வன் தரிசனம் பெற ஒழுகுவதே மானிடம் பெற்றதின் பயனாகும் என்பதை உணர்ந்து செய்தல் வேண்டும். அதற்குப் பணியுமடியார் சிந்தை மெய்ப்பொருளதாக நவில் ' சரவணபவ ' என்னும் தாரக மந்திரத்தை இடையறுது உள்ளத்தில் கொண் டொழுகல் வேண்டும்.

VI PART

மானிடம் பெற்றால் இவற்றையெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து தெளிந்த அனுபூதிமானான அருணகிரிநாதப் பெருந்தகை தன் சிந்தையில் குடிகொண்ட செந்தில் வேலவனை எண்ணிய வாறே அலைவீசும் கரையில் நின்று கருத, அவர் மனத்தில் அலை அலையாய் எழுந்த கருத்துக்களை யெல்லாம் திரட்டித் தான் பெற்ற இனபத்தைப் பூமியிலுள்ள மககளும் பெற வேண்டும் என்ற உயர்ந்த எணணத்தால், எளிய முறையில, மேற்கூறிய யாவும் விரிததுக காணுங்கால தெற்றென விளங் கும் படியாக, அமிழ்தொழுகு தமிழ்ச் சொற்களால் நயமுறவும் மனதில் ஆழ்ந்து பதியும்படியாகவும் சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் அமையக் கூறுவாராயினர். அவர் என்ன கூறுகிறார் ? கேட்க ஆவலுடையோமல்லவா ?

" கடம்பு முதலான பூங்கொத்துக்கள் மலர்ந்து விளங்கும் மணம் நாறும் திருவடியே சரண்புகும் இடம் என்று உணர்ந்து, கும்பிட்டு வணங்குகின்ற இந்திரன் தான் இழந்த அமரா வதிப் பதியை மீண்டும் பெறுமாறும், அவன மகளான தெய்வயானையின் தனத்தையும் தோளையும் பெறவும், சூரபன்மன் முதலான அரக்கர்கள் இறந்து ஒழியவும், கிரௌஞ் சம் என்ற குன்று இடிந்து பொடியாகவும், ஒளிவீசும் பொன் னாற் செய்த இடுப்பினிற் புனைந்த சதங்கைகள் ' கிணின் "

சிறந்துயர்ந்த நண்பினர் தம்முள் சினவார்
நிறந்த குடிப்பிறந்தார், நீங்கார் இனத்தரையே

கிணின் ' என்று ஒலி செய்யவும், காதில் அணிந்த காதணி களான தொங்கும் குண்டலங்கள் அசைந்து ஆடுதலால் காதொடு பொருத்தப்பட்ட சிறியகுழை எனும் ஆபரணத்தில் ஒளிவீசவும், ' தந்தன தனந் தனந் தன ' என்று செம்மையான சிறிய சதங்கைகள் கொஞ்சுவது போல் ஒலி செய்யவும், இரத் தினங்கள் பொருத்திய அழகான தண்டை என்னும் கணைக் காலில் அணியும் ஆபரணம் ' கலின் கலின் கலின் ' என்று ஒலிமுழக்கவும், அழகியவளான பார்வதி, மனம் நெகிழ்ந்து உருகி முத்தம் தரவும், வருகின்ற செழுமையான தத்தி நடக்கும் தளர் நடையுடைய மகனாக வந்தோனே! உலகெலாம் தொழும் சரவணப் பெருமாளே!

எமன் வரும் நாள் பின்னிடும் படியாகவும் (இல்லாமற் போகவும்), எபபொழுதும் மகிழ்ந்து பார்த்துப் பெண்களிடத் தில் அன்பு கொண்டு உருகும் சம்பந்தம் நீங்கும் படியாகவும், இராசதம், தாமதம், சாத்விகம் எனப்படும் மூன்று குணங் களும் அழிநது குணரகிதனாகவும், இரவு பகல் எனறு இருள் ஒளி என்று வேற்றுமைப்படத் தோன்றும் காலவித்தியாசத்தை யும் கடந்து கேவலசகலநிலை பெறவும், மெய், வாய், கண், மூக்குச், செவி என்ற ஐம்புலனகளையும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐம்பொறிகளையும் அவற்றால் நேரும் அல்லல் நீங்க அதுவே ஒழித்தகற்றி விளங்கவும், உன்னு டைய தாமரைமலர் போனற பாதங்களின் சிறப்புகளையெல் லாம் கவிபாகப் பாடித் துதித்து நிற்கவும், உன்னுடைய வெற்றி நகரமும், நினைக்க முத்தி தருவதுமான திருச்செந்தூர் என்னும் ஜயந்தி புரத்தையும், அங்கு விட்டகலாது நித்திய வாசம் செய்யும் (சங்கரரும் புஜங்கத்தால் போற்றிய) நின்னை யும், பிறர் சொல்லக் கேட்டு உணர்ந்து, சாத்திரங்களைக் கற்ற அறிவால உணர்ந்து, குருவின் உபதேசத்தால் எய்திய

தம்மளவில் உண்பார், தரும குணமுணரார்
அம்மா அருளர் அவனியுய வந்தோரே.

ஞானத்தின் பயனாக மனத்தால் உணர்ந்து, அந்த உணர்ச்சி மனத்தில் வேர்க்கொண்டு ஆழ்ந்து பதிந்திடவும், அங்கு எழுந்தருளி யிருப்பவன் 'கந்தன்'; பார்வதியால் சேர்க்கப் பட்டவன்; அன்பால் அடைபவர்களைத் தன்னிடம் சேர்த்துக் கொள்பவன் என்று பிறர் சொல்ல அறிந்தும், கல்வி யறி வால் அறிந்தும், என் அறிவினிற் சென்று மீளாவகையில், மெய்யறிவு கொள்ளும் நேர்வழி எனக்குத் தெளிவாக விளங்க வும், அன்பும் ஆர்வமும் குறைவுபடாத நினைவுக்கு இடமான மனம் விரிந்து விரிந்து பெருகி வளரவும், முன்பே பொறி புலன்கள் அடங்கினமையால், வாய் தன் செயலான பேசுதலை ஒழித்து அகற்றி பேசா வநுபூதியான மேலான மோன நிலையை எய்தவும், 'என் செயல்' எனப்படும் பற்றுடன் உடல் செய்யும் செயல்களானவை யெல்லாம் அறவே ஒழிந்து அறிந்து, 'நான்' என்பது அற்று, 'என்செயல் என்பது ஒன் றில்லை, எல்லாம் அவன் செயலே' என்ற ஊன்றிய நினைவில் முழுதும் செயல் ஒழிந்து தம்பித்து நிற்கவும், மனம், மொழி, மெய் என்னும் திரிகரணங்களும், ஐம்புலன்களும், ஐம்பொறி களும், அறிவும், நினைவும், ஒடுங்கி ஒடுங்கி மறைந்த நிலையில் மெய்ஞ்ஞான நினைவுகள் நெஞ்சத்தில் நிரம்பிடும் பொருட்டு எந்நாள் உன்னுடைய தரிசனத்தைப் பெறும்பேற்றினை அடையப் பெறுவேனோ?" இவ்வரிய கருத்துக்களை அழகுற அமைத்து இசையொடு பொருத்தித் தமிழமுதாக அருணகிரி நாதப் பெருமான் அருளியுள்ளார். அப்பாடலை இப்பொழுது படிப்போம்.

அந்தகன்வ ருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள

நோய்ப்பட்டார் உண்உணவு, செரியாமல் நோய்செய்யும்
வாய்மொழியால் தீயவர், தாமே வருந்துவரே

அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததிச கந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

சந்தச் செல்வர் திருப்புகழ் அருணகிரிநாதர் திருவடி வாழ்க.

அனியாய மன்னனை அவன்படைக ளேகொல்லும்
முனிவினைகள், இம்மையினில் வந்துவந்து மோதும்மே

கோட் செங்கட் சோழ நாயனர்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் பொன்னிப்பூங்கரையில் விளங்குவது திருவானைக்கா எனனும் திருத்தலம். அது பஞ்சபூதத் தலங்களில் ஒன்று. அபபுத்தலம். அதனல் இறைவனுக்கு அப்பு லிங்கம் என்றும், செழுநீர்த்திரள என்றும் பெயர் வழங்கும்.

அந்தத் தலத்தில் இறைவன் வெணணுவல் மரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கிருன. அதனல் அத்தலத்துக்கு ஜம்புகேசுவரம் என்ற திருநாமம் வழக்குகிறது. அந்தப் பெருமானை ஓர் யானை நாள்தோறும் காவிரிநீர் கொண்டு வந்து நீராட்டி, இலையாலும் மலராலும் அருச்சனை செய்து வழிபட்டது. அநதக காரணத்தால் அதற்குத் திருவானைக்கா என்ற பெயர் உண்டாயிற்று.

அங்கே ஞானமுடைய ஒரு சிலந்தி நாவல் மரத்திலிருந்து சருகு உதிராவண்ணம் தன வாய் நூலால் மேற் கட்டியைப் போல ஒரு வலையைக் கட்டியது. இறைவனை வணஙக வந்த யானை அந்த வலையைப் பார்த்து, "ஐயோ! ஈதென்ன அனுசிதம்?" எனறு வருந்தி அதைக் கலைத்து விட்டது. அதைக்கண்டு சிலந்தி வருநதியது. 'இறைவன்மேல் சருகு விழாமல் பாதுகாக்க நான கட்டிய நூற்பந்தலை இது அழிப்ப தாவது!' என்று சினஙகொண்டது.

மறுநாள் யானை வழிபடவநது சிலந்தி வலையைக் கலைத்த போது, சிலந்தி அதன துதிககையுள் புகுந்து அழுந்தக் கடித்து விட்டது. அதனல் யானை கீழே விழுந்து தன் துதிக்கையைத் தரையில் வேகமாக மோதியது. அதனல் சிலந்தி இறக்க, யானையும் இறந்து விட்டது.

உண்மை யறிந்து ஒழுகுவது தர்மவழி
எண்மையுறு நூல்களுள், மெய்ப்பொருளை எண்ணுதியே

சிவபூஜை செய்த புண்ணியத்தால் அந்தச் சிலந்தி சோழர் குலத்தில் ஒரு மகவாப் பிறந்தது. சுபதேவன் என்னும் சோழ மன்னன் தன் மனைவியாகிய கமலவதியுடன் தில்லை நடராசப் பெருமான திருவடியை வணங்கி வாழ்ந்து வரும் நாளில் கமலவதி கருவுற்ருள். கருப்பம் நிரம்பி மகவு பிறக்கும் வேளைக்குச் சற்றுமுன் ஒரு சோதிடர், "இன்னும் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறந்தால் எல்லா உலகமும் காவல்புரியும் சக்கரவர்த்தி யாவான்" என்று சொன்னுர். அதைக் கேட்ட கமலவதி ஒருநாழிகை யளவும் குழந்தை பிறக் காமல் இருக்க எனனவழி யென்று ஆராய்ந்தாள்.

கடைசியில் தன் காலை மேலே எடுத்துக் கட்டும்படி சொன்னுள். ஒரு நாழிகைக்குப்பின் மீட்டும் பழையபடியே காற்கட்டை அவிழ்த்து விடச் செய்தாள். இவ்வாறு செய்த மையால் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறந்தது. அதிக நேரம் குழந்தை தாயின வயிற்றிய் இருந்தமையால அதன் கண்கள் சிவந்திருந்தன. அதுகண்டு, "என கோச் செங் கண்ணனே?"! என்று மகிழ்ந்தாள். பின்பு அவள் உயிர் நீத்தாள்.

சுபதேவன் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தான். குழந்தைக்குச் கோச் செங்கணன் எனபதே பெயராக வழங்க லாயிற்று. தக்கவண்ணம் அறிவுபெற்று வளர்ந்த சோழர் குல மைந்தன சிவபிரானிடம் பேரன்புடையவனுக விளங்கி னுன். அவன தந்தை அவனுக்கு முடி சூட்டித் தான் தவஞ் செய்யப் போனுன்.

கோசசெங்கட் சோழன் பூவலயம் புரக்கும் கடமையை மேற்கொண்டு செஙகோலோச்சி வந்தான். பல சிவாலயங் களைக் கட்டினுன். திருவானைக்காவில் போன பிறவியில் இறைவன் திருவருள் பெற்றதனை உணர்ந்து, அங்கே அழகிய

ஆற்றுவெள்ளம் அடங்கும் அகலக் குளமுமுள
வீற்றரசர் காத்து விளங்கும் குடிபலவே.

கோயிலை எழுப்பி வழிபட்டான். இப்படிப் பலபல கோயில்களை அவன் கட்டினன்.

யானையைப் பகையாக எண்ணிய சிலந்தியே கோச்செங்கணனாகப் பிறந்தமையால், இந்தப் பிறவியில் அம்மன்னன் யானை யேருத மாடக் கோயில்களாகக் கட்டினன் என்பர்.

கோச்செங்கணன் சிவபிரானுக்கு ஆலயங்கள் எழுப்பியதைத் திருமங்கை யாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில் பாராட்டுகிருர்.

" இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ".

இதனால் அவன் திருமாலையும் வழிபட்டவன் என்று புலனுகிறது.

திருவானைக்காவில் வழிபட்ட சிலந்தியே கோச்செங்கட் சோழனாகப் பிறந்தது என்பதைத் திருநாவுக்கரசு நாயனர் பல இடங்களிற் பாடியுள்ளார். ஒரு பாட்டு வருமாறு;

" சிலந்தியுய் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச் செங்க ணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ்
சோணுட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னரே ".

சிவத்தொண்டு புரிந்து விளங்கிய கோச்செங்கட் சோழன் திருத்தில்லை சென்று வணங்கிச் சிலநாள் அங்கே தங்கி

மதயானை கோபத்தை, மதிப்பர் அதற்குரியார்
கதமுடைய குதிரையை, விரும்புபவர் காவலரே.

அங்குள்ள மறையவர்களுக்கு மாளிகைகள் பலவற்றைக் கட்டி வழங்கினன்.

இந்தச் சோழனுடைய வீரத்தைப் பாராட்டிப் பொய்கை யார் என்னும் புலவர் களவழி நாற்பது என்ற நூலைப் பாடி யிருக்கிறர். அது பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல் வரிசையில் ஒன்ருகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

சீகாழித்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஊனத்தசை தோல்கள் சுமந்த காயப்பொதி மாய மிகுந்த
ஊசற்சுடு நாறு குரம்பை மறைநாலும்
ஓதப்படு நாலுமுகன்ற னுலுற்றிடு கோல மெழுந்து
ஓடித்தடு மாறி யுழன்று தளர்வாகிக்
கூனித்தடி யோடு நடந்து ஈனப்படு கோழை மிகுந்த
கூளச்சட மீதை யுகந்து புவிமீதே
கூசப்பிர மாண ப்ரபஞ்ச மாயக்கொடு நோய்க
ளகன்று
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே
சேனக்குரு கூடலி லன்று ஞானத்தமிழ் நூல்கள் பகர்ந்து
சேனைச்சம ணோர்கழு வின்கண் மிசையேறத்
தீரத்திரு நீறு புரிந்து மீனக்கொடி யோனுடல் துன்று
தீமைப்பிணி தீரவுவந்த குருநாதா!
கானச்சிறு மானை நினைந்து ஏனற்புன மீது நடந்து
காதற்கிளி யோடு மொழிந்து சிலைவேடச்
காணக்கணி யாக வளர்ந்து ஞானக்குற மானை மணந்து
காழிப்பதி மேவி யுகந்த பெருமாளே!

(பதவுரை.) சேனக்குரு........................குருநாதா !

சேனக் குரு கூடலில் அன்று - சேனர் எனும் பட்டம் கொண்ட (சமணக்) குருமார் மதுரைமா நகரில் (ஆரவாரித்த) அந்நாளில் ;

தீரத் திருநீறு புரிந்து - தைரியத்துடன் புனிதத் திருநீற்றை விரும்பிப பூசி ; .

மீனக் கொடியோன் உடல் துன்று தீமைப் பிணிதீர - மீன் கொடி யுடைய பாண்டியர் மேனியில் விளைந்த பொல்லாத சுர நோய் போகவும் :

சேனைச் சமணோர் கழுவினகண் மிசை ஏற - எண்ணிலாத சமணர்கள் கழுமரத்தில் ஏறி இறக்கவும் ;

ஞானத் தமிழ் நூல்கள் பகர்ந்து உவந்த குருநாதா-தமிழில் அருள்ஞான மெய்ந்நூல்கள் எனும் தேவாரத் திருப்பதிகங்களை அருளி மகிழ்ந்த பரம ஆசாரிய ! ;

(கானச் சிறுமானை......உகந்த பெருமாளே !)

கானச் சிறு மானை நினைந்து - வனத்தில் இருந்த இளமான் ஆகிய வள்ளி யம்மையைத் திருவுளங்கொண்டு ;

ஏனல புனம் மீது நடந்து - தினைப்புனத்தில் திமிதநடை யிட்டுச் சென்று ;

காதல் கிளியோடு மொழிந்து - (கொஞ்சு மொழிக்) கிளி யான அத் தேவியுடன் (இகம் பரம் எனும் இருபொருள் தோன் றப்) பெருங் காதல் மொழிகளைப் பேசி ;

சிலை வேடர் காணக் கணியாக வளர்ந்து - வில்லேந்திய வேடுவர்கள் காணும்படி வேங்கை மரமாக வளர்ந்து ;

ஞானக் குற மானை மணந்து - ஞானம் எய்திய குறவர் குலத்து (மருண்டு கிடந்த) மானுன (அந்த மாபெரும்) இச்சா சக்தியை மணந்து ;

கண்ணிற் சிறநத உறுப்பில்லை ; காரிகைக்குக்
கண்ணும் கணவனினும் உறவில்லை கண்டாமே.

காழிப்பதி மேவி உகந்த பெருமாளே - சீகாழி யெனும் சிறந்த தலத்தில் சேர்ந்து செம்மாந்து இருக்கும் பெருமிதத் தெய்வப் பெருமானே !;

(ஊனத்தசை.................புவிமீதே)

ஊனத் தசை தோல்கள் சுமந்த காயப் பொதி - மலினப் படுகின்ற மாமிசங்கள், (அதன்மேல்) தோல்கள் (முதலியவை களைச்) சுமந்து கொண்டு இருக்கின்ற (வெறும்) பொதியான (இத்) தேகம்,

மாயம் மிகுந்த ஊசல் - (வனப்பு, வளர்ச்சி, சுருக்கம், சாய்வு எனும் களங்கமான) மாயம் மிகக் காட்டுகின்ற (போதல் வருதலான) ஊஞ்சல் ;

சுடு நாறு குரம்பை - தகன் காலத்தில் நாறும் மோசமான குடிசை ;

மறை நாலும் ஓதப்படும் நாலு முகன்தனுல் உற்றிடும் கோலம் - ஓயாது நான்கு வேதங்களேயும் ஓதுகின்ற (நால்வாய்) நான்முகனுல் (அடிமுதல் முடிவரை அமைந்த உறுப்புக்கள் பலவாக கோலிவைத்த) கோலம் ; (அட பாவமே!)

எழுந்து ஓடி தடுமாறி உழன்று - முதலில் (தவழ்ந்து, கவிழ்ந்து, இருந்து,) எழுந்து, (நடந்து,) ஓடி, (இடைவாழ்க்கை யில் வயிற்றுப் பிழைப்பை எண்ணிப் பலவகையில் அதிக) தடுமாற்றம் அடைந்து, (இப்படியே பல இடங்களில்) அலேந்து,

தளர்வு ஆகி - (உள்ளம் சோர்ந்து உடல்) தளர்ச்சியை யடைந்து ;

கூனி தடியோடு நடந்து - (குமைந்த முதுகு) கூனல் அடைந்து தடிபிடித்து நடந்து;

கோழை மிகுந்த கூளச் சடம் ஈதை புவி மீதே உகந்து - கோழை அதிகரித்த (குபபை) கூளமான (அறிவிலா) இந்த ஆக்கையை உலகில் விரும்பி யிருந்து ;

பெற்றோர்க்கு, மக்கள்போல் ஒளிமிக்க பொருளில்லே
பெற்றோர்க்கு மேலதெய்வம், பிள்ளேகட்(கு) இல்லேயே

(கூசப் பிரமாண ....அருள்வாயே)

கூசப் பிரமாணை பிரபஞ்ச மாயக் கொடு நோய்கள் அகன்று- வெட்கப்படும் அளவு விதிமுறைப்படி வந்து போகும் பிரகிருதி மயக்கத்தால் நேரும் கொடிய நோய்கள் அடியோடு அழிந்து ;

கோலக் கழலே பெற இன்று அருள்வாயே - அழகிய திருவடிகளையே (அடைக்கலம் என்று அடியேன்) அடையும்படி இன்று பரம திருவருளைப் பாலித்தருள், (எ-று).

விரிவுரை

விதிவழி ஆவது மதி. மதிக்குத் தக்கபடி மதச் சார்பு: ஊன்றி இதனை உணராமல், சால்பில் உயர்ந்தது எம் சமயம்! எவரும் இதையே ஏற்கவேண்டும் என்பது விதண்டை நடை.

எந்தச் சமயமும், அடிப்படைக் கொள்கையில் அருமை யுடையவை. அதை யறிந்தால், சமய சச்சரவுகள் சரிந்து விடும். கோண நடைபோடும் சில கோமாளிகள், உயர்ந்த இந்தத் தருமத்தை உணர்வதுதான் இல்லை.

சால்பு மிக்கவர்கள் ஆதிச் சமணர்கள். அவர்கள் கால் வழியில் வந்த பலர், விழுப்பம் கொள்ளாமல் வழுக்கினர். விரிந்த சைவத்தை விரோதித்தனர். கம்பீரமான பாண்டி நாட்டில் காலூன்றினர். அரசர் கூன்பாண்டியரை, தம் வசம் ஆக்கினர்.

நீறணிந்தாரைக் கண்டால், இப்பாவம் தீர இன்று பட்டினி என்றனர். சிவசிவ என்றால், இனி மூன்றுநாள் எமக்கு முட்டு என்றனர். முட்டு என்பது, பட்டினிப் பரிபவம்.

பயனுள குருமாரைப் பட்டினி போடுவதா? என்று, சமணப் பொது மக்கள் கொதித்து குதித்தனர். ஆத்திரம் தீர, சைவ மக்களைப் பலவகையில் அவமதித்தனர். நாடு முழுவதும் இந்த நடை. இவைகளால் நலிந்தது அறம்; வலிந்தது மறம்.

கற்றோர் உடனிருப்போர், கற்றார்போல் ஆவர்
கற்றோர்க்கு இடர்செயுநர், கண்ணிலிகள் ஆவாரே

**"சந்து சேனனும் இந்து சேனனும் தரும சேனனும் கருமைசேர்
கந்து சேனனும் கனக சேனனும் முதலதாகிய பெயர்"**

என, சேனக்குரு பட்டம் பெற்ற சாகச சமணர்கள், கூடல்மா நகரில் இப்படி நாடகம் ஆடினர்.

ஆளுடைப் பிள்ளையார் மதுரைக்கு வந்தார். அடியர் பலருடன் வந்த அவரை, ஊருள் நுழையாதே என்று, மடக்கி வழியில் மறியல் செய்தனர். அவ்வளவு தானா?

பிள்ளையார் தங்கிய மடத்தில், பெருந்தீ மூட்டினர். நள்ளிருளில் எழுந்த தீயைக் கண்டு, அடியார்கள் நடுங்கினர். உடனே பிள்ளையார் துள்ளி எழுந்தார். தீயவர் மூட்டிய தீயைக் கண்டார். தீவண்ணன் திருவுருவைத் திருவுளத்தில் கொண்டார்.

"செய்யனே ! திரு ஆலவாய் மேவிய
ஐயனே ! அஞ்சல் என்று அருள் செய்யெனை ;
கையராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே"

என்று பாடினர். மதுரைக்குத் தம்மை யழைத்த மங்கையர்க் கரசியார் மாங்கல்யத்தைக் காக்கவும், அரசரைத் திருத்தி ஆளவும் கருதி, 'பையவே' என்று அருளியபடி அவ் வெம்மை, சிறுகச் சிறுகப் பரவிச் சென்று, மன்னரைச் சுர நோயாகப் பற்றியது.

புழுவாய்த் துடித்தார் பூபதி. முன் வந்த சமண் குருமார், சுரம் தீர்க்க முயன்றனர். முடியாது சோர்ந்தனர். மகாராணி யார் விண்ணப்பித்தபடி, பிள்ளையார் வந்தார்.

"மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு

உண்மை யுரையார், பகைவரோ டொப்பாவர்
எண்ணும் சிறுமதியார், பாம்பிற் கிணையாமே.

செஞ்சுவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே" என்று திருநீற்றுப் பதிகம் பாடி, தீராச் சுரநோயைத் தீர்த்தார். முதுகு கூனும் நிமிர்ந்தது. பிறவிப் பிணியும் தவிர்ந்தது.

ஆளுடைய பிள்ளையாரது அருள் நோக்காலும், வாசக தீட்சையாலும், திருநீறு தொட்டு இட்ட ஸ்பரிசத்தாலும் விளைந்த பயன் இவை. கூன் பாண்டியர் என்ற பெயர் ஒழிந்தது. நின்றசீர் நெடுமாற நாயனர் ஆயினர் அரசர்பிரான்.

தோற்ற சமணர் மேலும் துள்ளினர். எது மெய்ச்சமயம் என்பது குறித்து, அனுபவ வாதம் செய்வம் என்று ஆர வாரித்தனர்

மெய்ச்சமய நுட்பத்தை, ஏட்டில் எழுதுவம். எரி நெருப்பில் இடுவம். *வேகாத ஏடு வெற்றிச் சமயம் என்றனர்* சமண ஆசாரியர். உடனே அஸ்தி நாஸ்தி எனும் தம் சமய மந்திரத்தை எழுதிய ஏட்டை நெருப்பில் இட்டனர். அந்த ஏடு, அப்போதே எரிந்தது கரிந்தது.

ஆளுடைய பிள்ளையார், உளங்கொண்டு மெய்ப்பொருளை உணர்ந்தார். உணர்ந்த உளத்தில் ஊன்றிய மெய்ப்பொருள், உண்மை உருக்கொண்டு உயர்நதது. வாய்வழி அவ்வுண் மையை வருவித்தார். அபபோது அவ்வுண்மை, வாய்மை *எனும் பெயர் தாங்கி வளர்ந்தது.*

வாய்மையை, ஓசையும் ஒலியும் ஆக்கினர். ஒலியைப் பொருளமைநத சொல்லாக்கி, அரிய ஒரு பதிகத்தை அருளி னர். அதை எரியில் இட்டார். பசுமை யுடையது சைவம் என்பதைப் பலரும் அறிய, அந்த ஏடு இறுதிவரை பசுமை யாக இருந்தது. கண்டவர் அதுகண்டு கைகுவித்தனர்.

சுரவாதில் அனல் வாதில் தோல்வி கண்ட அமணர்கள், சூதாடுவார் எண்ணுதல் போல், மூன்றும் வாதத்தில் முடி சூட நினைத்தனர்.

உயர்ந்த அறிவினர், உயர்செயலே செய்வர்
கயந்து பிறப்பறுத்தோர், வீட்டின்பம் காண்பாரே.

ஏட்டில் சமய உண்மையை எழுதுவம். புனித ஆற்றில் போடுவம். எதிரேறும் ஏடு, ஏற்றமான சமயத்திற்கு எடுத்துக் காட்டு என்றனர். இளைய பிள்ளையார் அதற்கும் இணங்கினர்.

அமணர் இட்ட ஏடு, ஆற்று நீரோடு ஓடிக் கடலுள் ஒளித்தது. திருஞான சம்பந்தர்,

'வாழ்க அந்தணர் ; வானவர் ஆனினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக ;
ஆழ்க தீயதெல்லாம் ; அரன் நாமமே
சூழ்க ; வையகமும் துயர் தீர்கவே'

எனவரும் திருமுகப் பாசுரம் அருளினர். அப்பதிகம் வரைந்த ஏட்டை வைகை ஆற்றில் இட்டார்.

அது நீரைக் கிழித்து எதிரேறிச் சென்று, திரு ஏடகத் தலத்தில் கரை ஏறியது.

அது கண்ட சமணர்கள், மானம் போயதே என்று மயங்கினர். நடந்தனர். கழுமரம் பல நட்டனர். பாய்ந்து அதனில் மாய்ந்தனர். இம் மும்மை வாதத்திலும், இருக்கும் நுட்பங்கள் பல.

என்ன அதிசயம்! அழிவு செய்தவர், தமது அழிவைத் தாமே செய்து கொண்டனர். அந்தோ! அபர சுப்ரமண்யமாகி, இத்தகைய ஆடல் பல செய்த ஆளுடைய பிள்ளையார் நீர் தானே! மதுரையில் நீர் அருளிய பதிகங்கள, 'ஞானத் தமிழ் நூல்கள்' என்று, உயர்ந்த மேலோர் இன்றும் உணர்ந்துளரே; 'கூடலில் நீறு புரிந்து...தீமைப்பிணி தீர...சமணோர் கழுவின்...ஏற...நூல்கள் பகர்ந்து...உவந்த குருநாதா!' என்று, கூறி உள்ளம் குதூகலிக்கின்றதே! இதுவரை விவாத காலம்.

சிவ முனிவர் கண்ணில் இருந்தார். மான வயிற்றில் புகுந்தார். பிறந்தபின், மறவர் மகளாய் வளர்ந்தார். காட்டில் தினைப்புனத்தைக் காவல் செய்தார். எங்கு இருந்தாலும் நின்

விண்மீன் மதிபரிதி உள்ளளவில், நோயினுடு
எண்ணி,அது தீர்முயற்சி என்றும் இருக்குமரோ

னேயே நினைந்தார். நிமல முருகன் அருள் 'என்று நேருமோ ? என்று, எப்புறமும் மருண்டு நோக்கும் இளம் மானாக இருந்தார்.

நினைந்த அவரை நீ நினைத்தாய். தினைப்புனம் நோக்கி நடந்தாய். மருட்சியிலும் துள்ளலிலும் மானான வள்ளியை, அதிகமாகக் கொஞ்சுகிளி என்று அணுகி அறிந்தாய். 'கொஞ்சித் தமிழைப் பகரும்' உனக்குத்தான், அவர் கொஞ்சும் அருமை குணிக்க இயலும்.

அவ் வள்ளிக்கிளி, யாது யாது வினவியதோ! காதல் மொழி எனும் பெயரில், அனுபவ நுட்பம் யாது யாது கூறினையோ ஐயா !

'மானை நினைந்து......புனமீது நடந்து.........கிளியோடு காதல் மொழிந்த' நுட்பம் கணிப்பாரும் உளரேயோ !

இடையில் வேடுவர் தடையாய் வந்தனர். 'கண்டனை. உடனே வேங்கை மரம் ஆயினை. வேங்கை மரம் பூப்பூத்தால், அது விவாக காலம். இது மறவர் அறியும் மரபு. அவர்கட்குப் புஞ்சாங்கம் பார்க்கத் தெரியாது அல்லவா! பாவை வள்ளி பரிபாகம் எய்தினள். நீயும் மணக்க உளங்கொண்டாய்; அதை அறிவித்தால் அன்றி அறியாத வேடர்கள் அறியுமாறு, அம் மரஉருவில் அமர்ந்தாய். முன்னே மருளும் வெறும் மானாயிருந்தார் வள்ளியார். அடிப்பாகம் வேதம்; இடைப் பாகம் ஆகமங்கள்; கிளைகள் எல்லாம் கலைகள். இப்படி எழுந்த வேஙகையைப் பரிசித்தபின், 'ஞானக் குறமான்' ஆயினர் அந்நங்கையார்.

ஞான சக்திதரனை உனக்கு, குறவர் குடியில் இருந்தாலும் புனித ஞான குறமான் நல்ல பொருத்தந்தான். 'காளி வழிபட்ட பதி காழி எனறு ஆயது. நிக்ரசக்தி பேறுபெற்ற அத்தலத்தில், அருள்ஞான அநுக்ரக சக்தியான வள்ளியுடன் இன்பம் கண்டு இருக்கினறாய்.

என்றும் உலகில ஈவாரும் ஏற்பாரும்
துன்றும் பிறப்பிறப்பும் தொடர்தல் இயற்கையதே

' சொரூபத்தில் பிரமம் ; தடத்தத்தில், இருக்கும் பெருமான்கட்குள் பெரிய பெருமான் நீ எனும் பொருளில், 'பெருமாளே' என்று கூவி யழைக்கும் எம் விண்ணப்பம் கேட்டருள்! குமரா செவி யேற்றருள் !!

ஊனமான ஊன் மறைய, அதன்மேல் புழுங்கும் தோல் ஒன்று போர்க்கப் பட்டது.

' மச்ச மெச்சு சூத்ரம்—ரத்த பித்த மூத்ரம்
வைச்சிறைச்ச பாத்திரம் ! '

ஆ ! ' காயப் பொதி ' இது ; இச சுமையை ஏற்றேன் !

' பாலனென பருவம் போம் ; பனனு குமாரப் பருவம்போம்;
கோலம் ஆன தருணம்போம் ; கோலையூன்றிக் குனிந்து எழுந்து
காலன் மாய்க்க, அனைவர்களும் கல் என்று அழுது பேர்மாற்றி,
ஏலப் பிணம் என்று ஒரு பெயரிட்டு இடுகாட்டு இடுதல்
ஒரு தலையே !'

என்றபடி, மாறி மாறி வரும் இதன் மாயத்தை நினைததாலே மடங்கி மனம் முடங்குகிறதே! இந்த அழகில், எதையோ சாதிப்பதுபோல, எங்கெங்கேயோ போவதும் வருவதும் ஆன ஊசலாட்டு வேறு.

இக் காயத்தைக் காக்கப்படும் பாட்டிற்கும் கணக்குண்டோ? வாய் நாற்றம், கண்ணின் பீளை நாற்றம், அக்குள் நாற்றம், மலநாற்றம். ஐயய்ய! ஏறிய வெப்பத்தால எழுகின்ற நாற்றம் சொலலத் தரமல்லவே. இறுதியில் சுட்டுப் பொசுக்கும் காலத்தில் உண்டாகும் சுடுநாற்றம் தாங்க முடிவது இல்லையே! உடம்பெல்லாம் பொததல் ; பெருந துவாரம் ஒன்பது. ஐயோ! இது 'சுடு நாறு குரம்பை' என்பது எவ்வளவு உண்மை அனுபவம். இவ்வுடலைச் சுமந்து எழுந்து, ஓடி, தடுமாறி, உழன்று, தளர்வடைந்து, கூனி, தடிபிடித்து மூன்று காலால்

என்றும் அறம்புரியான், எவர்துணையும் இல்லாவான்
துன்றும் ஒழுக்கமுளான், உலகுவக்கும் தூயோனே.

நடந்து, ஈனமான கோழை மிகுந்த குப்பையான அறிவிலா இவ் ஆக்கையை விரும்பிய அநியாய வாழ்க்கையிது; அள விலாது நாணும் அளவு, செய்த செயல்வழி நான் பிறந்தேன் என்று, வரும் உலக மாயா நோய்கள் எத்தனை?

என் கோலமெலாம் செயற்கைப் பாழ்.

" ஆயிர கோடிகாமர் அழகெலாம் திரண்டு ஒன்றாகி
மேயின எனினும், செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது என்றிடின், இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமை யார் வகுக்கற் பாலார் ?

என்று, சூரபதுமன் சொல்லித் துதித்த இயற்கை அருட்கோல வாழ்வானது, உனது அருளார் திருவடி. கற்றும் அறிவிலாச் சமணர்க்கு, மெய்ம்மையைக் காட்டினை. காட்டியும் தேரு அவர்கள் கழுமரம் ஏறினர். கல்லா மறவர் குல வள்ளியார் உள நெகிழ்வை உணர்ந்து, காதல் நாடகம் ஆடினை; அவரது பரிபாக காலத்தை, கணி எனும் பெயருடைய வேங்கை மரமாகிக் காட்டினை; திருத்தித் திருத்தி வள்ளியாரை இணக்கினை! அடியேற்கு மற்றொன்றும்வேண்டா. இந்தச் செயற்கைக்கோலம் போதும் போதும்! குருநாதா! பெருமாளே! கோலமாகிப் பேறுதரும் நின் திருவடிகளில், இடம் கொடு அடியேற்கு என்று இறைஞ்சி வேண்டியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

பிறர்க்குக் கொடுத்துண்பான் புகழ்நடுவான்; அன்னவன்தன் திறப்பொருளை யேபறிப்பான், தீநரகில் வீழ்வானே

பிணிக்கு மருந்து

[ஆ. கி. ரங்கராஜன்]

'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் அருளொடு நிறைந்த' பரம்பொருளாக இறைவனைத் தாயுமானுர் காண்கின்றார். அதாவது இறைவன ஜோதிஸ்வ ரூபமாக உள னென்பது ஞானியர் கண்ட உண்மையாகும்.

ஜோதியானது அதிகமாயின் வெபபத்தைத் தரும் என்பது விஞ்ஞானியர் கூற்று. ஆனல் வெப்பம் உடமபையும் உயிரையும் காப்பாற்றுகிறது. வெப்பம் தணிந்தால் குளிர் அதிகமாகி உயிர்களுக்குத் துன்பம் விளேவிக்குமாம். இறைவனே எனில், ஜோதிஸ்வரூபனய் விளங்குவதோடு உயிர்கள் உய்ய கருணையைப் பிரவாகமாகத் தருகின்றான். ஆகவேதான ஆண்டாளும் இறைவனைக் 'கதிர் மதியம் போல் முகத்தான' என, அதாவது சூரியனைப் போன்று அதிக ஒளியையும், சந்திரனைப் போன்று தணிந்த தயையையும் உடைய வதனமுடையவன் என உரைக்கின்றாள்.

மாயாதீதனய் விளங்கும் இறைவனை மானிடன் வணங்கி வழிபடக் கடமைப் பட்டவன் என்பது, வேத உபநிஷதங்களின் கட்டளேயாகும். மானிடன் வாழ்ந்து நற்கதி பெறுவதற்காகவே வேதங்களும் உபநிஷதங்களும் தோன்றின.

மானிடன் பிறவி எடுத்ததன பயனை அடைய வேண்டுமெனின் இறைவனை வழிபடுதல் இனறியமையாததாகும். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின ஆயுட்காலம் நூறாண்டுகளென நூல்கள் உரைப்பினும, அந்த நூறாண்டுகளும் மானிடன் வாழ்ந்திருப்பதில்லை. இடைக்காலத்திலேயே சரீரத்தை விட்டுச் செலகினறான. அவன தொடர்ந்து

நெய்யைச் சொரிய நெருப்பெரியும், விண்ணவர்கள்
மெய்யன்பால் சார்வாரை மேம்படுத்த எண்ணுவரே.

வாழ்ந்த போதிலும், விழிப்புடன் இருக்கும் காலம் பகலே ஆதலின், துயிலும் காலமாகிய இரவாக்ப் பாதி நாட்கள் ஐம்பது ஆண்டுகள் செல்லுப்படி ஆகின்றன.

குழந்தைப் பருவமும், வாலிபப் பருவமும் விளையாடி, கல்வி பயின்று, அதன பின் தருண பருவத்தில் மானிடன் குடும்ப வாழ்க்கையில் இறங்குகின்றான். பின் முதுமைப் பருவம் வருகின்றது. காலனின் அழைப்பு தொடர்கிறது. இதற்கிடையே எண்ணற்ற தொல்லைகள், நோய்கள, தகராறுகள். இத்தகைய துன்பப் பிறவியாகிய மானிடப் பிறவியே தமக்கு வேண்டாம எனத் தொண்டரடிப் பொடியார் இறைவனிடம் முறையிடுகின்றார்.

ஆயினும் பிறவியினறி விடுதலை அடைவதென்பது கடினமானதாகும். மேலும இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யார் அறிய வல்லார்? எனவே இப்பிறவி ஒரு நோய் என்பது பெரியோர் கருத்து. இவ்வாறாக மானிடன் பூவுலகில் பறபல துனபங்களிலும் பிணிகளிலும உழன்றால் மீள்வதுதான் எப்படி?

இதற்கு ஒரே வழியாகவும் மருந்தாகவும உள்ளது எது எனில், இறைவனைப் பிரார்த்திபபதேயாம். இறைவனைப் பிரார்த்திபபதனால அதி பயங்கர அல்லல்களினின்றும் மீள்வதற்கு இயலுகினறது.

இறைவனை ஜோதிஸ்வரூபனாக என் பெரியோர்கள் கண்டார்களெனில்,

இருளின சாயை துன்பமாகும. ஒளியின் தோற்றம் இன்பமாகும். இருளிலே பயங்கரம் உளது. ஒளியிலே துணிவு உள்ளது. உலகை நாசப்படுத்தும விஷப் பிராணிகளும் துனமார்க்கரும் இருளிலேதான் பதுங்கி நிற்கக் கூடும். ஒளியிலே அத்தகைய அபாயம் ஏறபட மாட்டாது.

கன்றை உண்பிக்கப் பால்பெருகும் காட்சிபோல்,
என்றும் விருந்துவக்க, எண்ணிலின்பம் எய்துமே

எந்தச் செயல்களும் தொழில்களும் ஒளியிலேதான் நிகழ முடியுமாதலின், அவ்வொளியின் வடிவமாக விளங்குபவன் இறைவன். இறைவனைத் தாய்மையாய்க் காணும் பெரியாரொருவர் பின்வருமாறு கூறுகின்றார் :

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே.

எனக் குறிப்பிடுகின்றார்.

மணி எனில் இரத்தினம் ஆகும். அது பிறகற்களின் அம்சம் பெற்றிருந்தாலும் பிறவற்றிற்கு இல்லாததோர் உயர்வு பெற்று விளங்குவதன் காரணம், அலாதியான பிரகாசத்துடன் ஜொலிப்பதேயாம். இந்திர லோகத்தில் இந்திரனுக்கு உரிமையானதொரு இரத்தினம் உண்டு என்றும், அதன் பெயர் சிந்தாமணி எனவும், விரும்பிய எதையும் அது அளிக்கும சக்தி வாய்ந்தது என்றும் புராணங்கள் கூறும்.

மணிவணணன் என்பது இறைவனுக்கு அடியார்கள இட்டழைக்கும நாமங்களுள் ஒன்று. உயிரற்ற கல்லே அனைத்தையும் வழஙகுவதெனின், அக்கல்லை உண்டாக்கிய இறைவனின் கருணையை எடுத்துரைக்க இயலுமா ?

பிரகாசிக்கினற இரத்தினங்களாகவும், அவற்றாலான ஆபரணங்களாகவும், அவற்றின அழகாகவும் விளங்குகின்றான் இறைவன. இத்தகைய இறைவனை அணுகி அடிபணியாதவர்க்குப் பிணி விலகாது. அதாவது துன்பங்கள், பிறவி முதலியன தீராது. கொடைவள்ளலான இறைவன் எல்லா வடிவங்களிலும், எல்லாப் பெயர்களிலும், எவற்றிலும காணப்படுகின்றான. அன்பின் வடிவமாக விளங்கும்

நன்மக்கள் பேற்றால் நல்லின்பம் சித்திக்கும்
நன்னட்பர் சேர்வால் பொருளழிவு நண்ணாதே.

அவனை அடியார்கள் அன்னையாகவும் கண்டு வழிபடு கின்றனர்.

இறைவனின் தோற்றமே பெரும் கருணை ஒளியை வீசும் மணியாகும். மிகவும் அசாத்யமான காரியங்களை சாதிக்க வல்ல இறைவனின் நாமங்களே மந்திரம். அவனை வணங்கி வழிபடுவதே நோய்பிணி, துன்பம், வறுமை, பிறவி அனைத்தையும் நீக்க வல்ல மருந்து. இவ்வாறு பொருள்படக் கூறும் ஸ்ரீ அபிராமி பட்டர் மேலும் கூறு கின்றார்.

பணியேன் ஒருவரை, நின் பத்மபாதம் பணிந்த பின்னே!

(உனைப் பணிந்தபின் பயனற்ற எவரையும் பணிய மாட்டேன) எனத் தமது அந்தாதியின் 24-ம் பாடலை முடித்துத் தொடருகின்றார்.

கணபதி பக்தர்கள் 20.

சிவகளிறும் பவகளிறும்

(ரஸபதி)

தெய்வ உதயம்

அளவிலாத ஆன்மாக்கள, இறந்தும் பிறந்தும் இளைக்கின் றன. அவைகளது களைபபை மாற்ற, சதா இன்பக் கூத்தாடு கின்றான் இறைவன். அப்பொன்மேனிப் பெருமானைத் தாங்கும் வெண்மேனியது கயிலாயம். அணட முகடுவரை அளாவி, ஊழிதோறும் ஒளி வீசி உயர்ந்து, அருளொழுகும் அருவி பல பாயும் ஆநந்த நிலையம் அது.

ஓவிய மண்டபம் ஒனறு, அம்மலையில் உள்ள உயர்ந்த இடம். எழுகோடி மந்திரங்கள, அங்குச் சித்திரங்களாகி இருந்து சிரிக்கின்றன.

பெருகுகின்ற செல்வம் முனபிறபபின் பேரும்
பெரும்புகழாற் கெப்பகையும் பீடழிந்து போகும்மே.

சிவனுர் ஒருநாள், இறைவியுடன் அங்கு எழுந்தருளினர். பரனும் தேவியும், அம்மந்திரங்களைப் பார்த்தனர். அவைகள் தம் சொருபங்கள் என்பதை, எவரும் காணுமாறு கண்டு களித்தனர். அவைகளுள் ஒன்று பிரணவம். ஊன்றி அதனை உணர்ந்தனர். பரமன் பார்வை பட்டதும், அதனுள் இருந்த அகரம் முழங்கி ஆண்யானை ஆயது. உமையின் அருள் நோக்கால், உகரம் பெண்யானையாக உருவெடுத்தது. கனுவற இருநாதங்களும் கலநதன. அக்கலப்பில இருந்து, ம்ம்ம் எனும் மௌன ஒலியுடன் பேரொளி எழுந்து எங்கும் பிரகாசித்தது. அவ்வொளி நடுவில், கஜமுக கணபதி உதயம் ஆயினர்.

உவகை முகம் காட்டிய அவ்வோங்காரர், வரத சிவத்தொடு தேவியை வலம் வநதார். வாழ்விக்கும் திருவடிகளை வணங்கினுர்.

இருவரும் சேயை மாறிமாறி எடுத்தனர். தம்தம் மடியில் வைத்து மகிழ்ந்தனர். கொஞ்சிக் குலவினர்.

குழந்தாய்! நீ எம்மில் வேறல்லன்; உன்னை வணங்குநர் விக்கிநஙகள் ஒழியும். நினைக்கும் அவர் எண்ணங்களை நிறைவேற்றிவை! இன்று முதல் நீ கணங்கடகு அதிபன்.

நீ சிவமுக களிறு. பவமுக மதயானைகளின் அக்கிரமத்தை அடக்க வந்தது உன் அவதாரம். காலம் வரும் போது, அக்கைங்கர்யம் செய் என்று அருளினர் சிவபிரான்.

அதன்பின் கணபதி, கயிலை வாயிலில் அமர்ந்தார். வழிபடும் உயிர்கட்கு இன்பத்தை வழங்கினுர்.

பெரியோர் செய்த பிழை

வசிட்டர் மரபினர் மாகதர். பேரின்ப நோக்கில், அவர் பலகாலமாகப் பெருந்தவமே செய்தார். வீணர்கள் அசுரர்கள்.

வேதக் கருத்தாய், விளங்குதமிழ்ப் பாட்டுமுள
ஏதமிலா வேள்வியென, ஈகைகளும் உள்ளனவே.

அவர்கள் குலத்தில பிறந்தவள் விபுதை. விசேஷ புத்தியள் என்பது, அப்பெயர்ப் பொருள்.

ஒருநாள் அம்மங்கை, தவம் செய்யும் மாதகதரைக் கண்டாள். பழுத்த தவத்தால், அவர் திருமேனி பளபளத்தது. கண்டவள் மனத்தில் காமம் கனன்றது. மணந்தால் இவரையே மணப்பது; இன்றேல் மரிப்பது என்று திட்டம் இட்டாள். இதற்கு யாது வழி? தன் முதிர்ந்த அறிவால ஒரு முடிவிற்கு வந்தாள்.

அவர் பார்வைபடும் தூரத்தில் அமர்ந்தாள். இவர் உறவே வேண்டும் என்ற எண்ணத்தில், இருந்து தவம் செய்தாள். அவள் தவப்பயனும், மாதவர் பழைய வினைப்பயனும் ஒன்றில் ஒன்று உறவாடின. அதனால் தவம் கலைந்தது, கண்விழித்தார் மாதகர்.

கண்ணிற்கு எட்டிய தூரத்தில், இரண்டு காட்டுயானைகள் கலபுயில் இருந்தன. எதிரில் பெருந்தவத்தில் இருக்கிறது விபுதைப் பெண்யானை. சித்தம் சபலித்தது. எழுந்தார். தன் நிலையை மறந்தார். அவளை அணுகினார்.

பெண்கள் திலகமே! நீயார்? எந்த ஊர்? உன் பேர் யாது? தவம் செய்யும் உன்நோக்கம் யாது? என்று மென்மேலும் வினவினார். கண் விழித்த விபுதை. அவர் காலில் விழுந்தாள். தன் கருத்தை அறிவித்தாள். அது அந்தி நேரம். உலகம் செய்த பாவம், மாதவர் மதியை மயக்கியது. அதன் பின் என்ன? அவர்கள் தொடர்பால், அகில சராசரமும் நடுங்க, ஒரு ஆனைமுக அசுரன பிறநதான். குருதியை வானம் கொப்புளித்தது. குள்ளநரிகள் ஊளையிட்டன. குமுறியது உலகம்.

அதன் பின் மதஙகர்க்கு அறிவு தெளிந்தது. என்ன தவறு செய்துவிட்டேன் என்று மனம் இடிந்தார். அசுர மகள். அடாத அந்திநேர சம்பந்தம். தன் தவ சக்தி முழுதும், பிறந்த

பிறரை யிகழ்ந்தவன் பீடழிவன; நண்பனென
உறுதற்(கு) உரியான், உயிர்கொடுத்தும் காப்பானே.

பிள்ளையிடம் காய சக்தியாகிக் கலந்தது என்பதைக் கணித்தார்.

இவனால் உலகிற்கு இடர்விளையச் செய்தேன் என்று அழுது கதறி அலமந்தார். விபுதையிடம் இருந்து விலகினார். நீராடினார். அனுட்டித்தார். சிவத்தை நினைந்தார். தவத்தில் ஆழ்ந்தார். ஆம். அவ்வளவுதான அவர் செய்தி!

அராஜக ஆட்சி

அசுரர்கள் இதை அறிந்தனர். தாயிடம் வளர்ந்த கஜமுகனைக் கலந்தனர். கூட்டிச் சென்றனர். சென்ற இடமெல்லாம் கொக்கரித்தனர். பல உயிர்களைக் கொன்று பசியாறினர். கனல் பற்றிய காட்டைப்போல், பல இடங்களைப் பாழாக்கினர்,

இப்படி வீணே திரியும் கஜமுகனை, அசுர குரு அறிந்தார். அவன் எதிரில் வந்தார்.

அவன, யார் நீ என்று அதட்டினன்.

கஜமுகா! நான் உன் குல குரு. இந்திரன் உன் குலப் பகைவன. என்றாயினும் ஒரு நாள் உனனை அவன் இடிப்பன். எச்சரிக்கிறேன! உருத்திரரை நோக்கித் தவம் செய்! அதனால உனக்கு ஆக்கம் அதிகரிக்கும். பார் முழுதும் உனனைப் பணியும். அதன் பின் நீ நினைத்தவை யாவும் நிறைவேறும் என்றார். தவத்திற்கு ஆன வழிமுறைகளையும் அறிவித்தார்.

கயமுகன் தனித்தான். சுக்கிரன் சொனன முறையைத் தழுவி, பல காலம் தவம் கிடந்தான். எதிர் நினறார் உருத்திரர்.

ஸ்வாமி! உயர்திணை அஃறிணைகளாலும், எந்த ஆயுதத்தாலும் இறவா வரம் அருளும் என்று விநயம் காட்டி வேண்டினன்.

இரபபார்க்குப் பற்றுக்கோடு ஈகையரே; என்றும்
இரக்கம், தலையாய அருளொழுக்கம் என்பவே.

அங்ஙனே ஆக என்று உருக்கரந்தார் உருத்திரர்.

அதன பின் அவன், குல குருவைக் கலந்தான். மதங்கம் என்ற பெயரில், ஒரு நகரை அமைத்தான். முன்னவன் யானே என்று முடி சூடினன். அசுரேந்திரனையும் சுக்கிரனை யும் அமைசசர்கள் ஆக்கினன். அசுரர்களைப் பெருக்கினன். மண்ணவர் செல்வம், விண்ணவர் ஐஸ்வர்யம், பாதலர் ஆக்கம் யாவும் கவர்ந்தான். தேவ அசுர நாகர் மாதர் பலரை வலிந்து மணந்தான். நாடுமுழுதும் நடுங்க, தன் கொடுங்கோல் ஆட்சியை நடத்தினன்.

அசுரர் அலலாத யாவரும், காலையும் மாலையும் என் முன் வரவேண்டும். மூன்று குட்டு, தோப்புக் கரணம் மூன்று போட வேண்டும். தவறினல் தலையுருளும் என்று, கட்டாயப் படுத்தி னன். எனன சங்கடமான செய்தி! நல்லோர் நடுங்கினர். கலங்கினர் கற்பினர். இது கண்டு, அலறி அழுதது அறக் கடவுள். பலகாலம் இந்தப பரிபவம்.

விண்ணப்ப விளைவு.

கயிலை வாயிலில் கணபதி. அவர் முன் ஒரு நாள் வான வர் கதறினர். கயமுகன் படுத்தும் வேதனைப் பாட்டை விண் ணப்பித்தனர். இரக்கம் கொண்ட எம்பிரான், அபயவரத கரம் காட்டி ஆறுதல் அளித்தனர்.

பூதகணம் புடை சூழ, கணபதி புறப்பட்டார். போர்ப்பறை முழங்கியது. அநியாய மதங்க புரியை யாவரும் அணுகினர்,

விவரம் உணர்ந்த கயமுகன், வடவைத் தீயைப்போல் கொதித்தான். உடனே படைகள் தொடரப் புறபபட்டான். இரு திற சைனியங்களும் கை கலந்தன. பூத கணங்களைக் கயமுகன் அதிகமாகப் புடைத்தான். அதன் பின் வரத கணபதி திருமுன் வந்தான்.

நங்கையர்தம் நாணத்தை நல்லாண்கள் தாம்விரும்ப
பங்கமுறு மங்கையரை, விரும்புபவர் பாவியரே.

பிள்ளாய்! என்னை எதிர்த்துப் பிழைத்தவர்கள் இல்லை. என்போல் முகம் கொண்டாய்! மனம் உனபால் இரக்கம் கொள்கிறது. வீணில் அழியாதே! ஓடி விடு என்றான்.

ஓங்கார கணபதி, நலம் தரும் சத்வஆங்கார நகை செய்தார்.

கயமுகா! பக்தர்களைப் பாதித்தவர்கள் பலநாள் வாழ்ந்தது இல்லை. அகில உலகமும் உன கொடுமை தாங்காமல், இன்று அலறுகிறது.

அது கண்டே உன்னுருவில் வந்தேம்: வீண பேச்சை விடு! நல்லவனா யிரு! உடன்பாடு இல்லையேல், வில்லையெடு! என்று விளம்பினர் கணபதி.

கடுகடுத்த கயமுகன், கடும்போர் நடத்தினன். முழுங்கிய அவன் வில்கள் பல முறிந்தன. ஏவிய பயங்கர ஆயுதம் யாவும், எம்பிரான் திருமுன் செயலற்று விழுந்தன.

கணபதி ஏவிய தண்டு, கயமுகன் மார்பில் மோதியது. அவ்வளவில் அவன் அயர்ந்தான். அடுத்துப் புறப்பட்ட மழு, அடியொடு கயமுகன படைகளை அழித்தது. மானம்போன அவன், மாயப் போர் பல செய்தான், கணபதி தம் வலப்புறத் தந்தத்தை ஒடித்தார். ஏவினர். ஆர்ப்பரித்துச சென்ற அது, அவன் மார்பைப பிளந்தது. எந்த ஆயுதத்தாலும் இறவா அவன் உடல, எநதத் திணையாலும் இடியாத அவன் தேகம், யானைமுக கணபதியால், எந்த ஆயுதத்தோடும் சேராத அவர் தந்தத்தின் தாக்குதலால், மலை சாய்ந்ததுபோல் மாநிலததில் வீழ்ந்தது. இறவா வரம்பெற்ற கயமுகன், அப்போதே மலைபோல் உயாநத பெருச்சாளி ஆயினன். கனல் கொப புளிக்கும் கண்களா, திக்கஜங்களை வளைத்துக் கட்டும் வால்,

---

காய்கறிகள் உண்டால், சத்வகுணம் கைவருமால்
ஆய்வின்றிக் காய்வாரை, வெறுப்பார் அனைவருமே.

உடல் முழுதும் மதமதத்த மயிர், பயங்கர கோரப் பற்கள், அமுத்தமான முகம், மலைகளையும் சாய்க்க வல்ல நான்கு கால்கள், விண்முகடு அளாவிய முதுகு, அடே அப்பா! இப்படிக் கோரப் பெருச்சாளியாகிக் கொக்கரித்தான்.

விண்ணவர் கலங்கி விதிர்விதிர்த்தனர். பெருசசாளி யானை, பெருமான் அப்போதே பிடித்தார். அதன் முதுகில் ஏறி அமர்ந்தார். கணபதி பரிசம் பட்ட அளவில், கயமுகனது கன்ம இருள் கழன்றது. மெய்ஞ்ஞான ஒளி மேவியது. அதன் பயனாக, அவன் பரம கணபதிக்கு ஊர்தியாகி உயர் வடைந்தான்.

கயமுகன் வீழ்ந்த இடத்தில், கணபதி சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். அந்த இடம், கணபதீச்சரம் என்னும் பெயரை எய்தியது.

பொய்யே சொன்ன ஒருவர், அப்பாவத்தால் மலைப்பாம் பாகிப் புரண்டார். பல காலம் அச்சாபத்தால் பரிதவித்தார். இரக்கம் மிக்க கணபதி, அதன் எதிரில் வந்தார். அதன் சாபம் அகன்றது. மார்கழி சஷ்டியில் இநதச் சம்பவம். அந்தப் புண்ணிய தினத்தில், கயமுகப் பெருசசாளியை ஊர்தியாக கொண்ட கணபதியை வழிபடுவோர், எல்லா நலனும் பெற்று இன்புறுவர்.

கயமுகன் முன்போட்ட குட்டுகளையும், தோபபுக் கரணத் தையும், தம் அன்பிற்கு அடையாளமாகக் கணபதி திருமுன் இட்டு, தீரா விக்கிநஙகள் யாவும் தீர்ந்து, உய்கிறது இன்றும் உலகம்!

வாழ்க கணபதி பக்தர்கள்!

தன்னை விரும்பார்முன தான்சேறல், இகழ்ச்சியதாம்
புன்னுமவர் ஆதரவால், பகைககே இடமாமே

BHAJAN

PART IV

We raised various queries about Bhajan to start with. A Bhaktha may perform Bhajan by himself or in company or in a multitude. Tens to thousands join a Bhajan as it proceeds. Is it the joy of solitude or the pleasure of company that lends most enchantment to Bhajan? The Bhaktha in Bhajan, enjoys the charms of solitude in a multitudinous gathering and even so does he enjoy the inspiration and company of the greatest souls, living and dead in his experience. Even as a thousand rivulets joining a river in flood lose their identity in the integrated flowing stream, the whole multitude of Bhakthas dissolve in the unitary and single experience of God-love, and the feeling of the multitude is the joy of the solitude of the one. For, every one forgets the outer world; each is lost in his enjoyment. There may be many men, but in Bhajan there is but *one mind*. Even when one does Bhajan alone, his mind becomes the habitation of the great ardent spirits who having discarded their physical bodies, have secured an eternal abode in the songs of ecstasy into which they have resolved themselves. Thus in Bhajan, a Baktha enjoys a multitudinous solitude. It

is like the Sruti in music into which a thousand strains do their playing.

Song and poesy are the expression of Ecstasy of the soul. They are not the result of disciplined human effort. Grammar never made poetry or diction. It is within my personal experience that beautiful poems have been sung by Bakthas who had not picked up even a correct comprehension of the alphabet. This shows that poesy is a product of the rhythm of the soul under certain favourable circumstances. The joy of poesy and the sweetness of musical strains, rhythm and diction are all the accompanying blessings of true Bhajan.

There are no more dynamic forces in the world than thoughts—I mean ideas. Ideas learnt up from books, conned up by rote and reproduced as on a gramaphone, do occasionally touch the heart and seem to inspire. But the ideas that float into the cognition of a Baktha over the flood of joy flowing on the bed of a blank mind untarnished by memories of worldly experience of pain and pleasure are the very spice and treasure of Bhajan.

(To continue)

—*Thiruppugal Mani.*

நாரணன்காண் நான்முகன்காண் நால்வேதன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்தான்காண்
புரிசடைமேல் புனலேற்ற புனிதன்தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன்தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க்கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவன் என் கண்ணுளானே !

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி : : மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினாயில்

(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49. சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன் : 2510

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி
129, மூர் தெரு
சென்னை-1. டெலிபோன் : 2058

குகஸ்ரீ ரசபதியின் அருள்நூல் விரிவுரைகள்

விநாயகர் அகவல், கந்தர் அநுபூதி, திருவகுப்புகள், கந்தர் கலிவெண்பா, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கயிலாய ஞான உலா.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65. Tirupalli Street Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.